காலை முரசு

பக்கங்கள்:-22

## இந்தியா - பாகிஸ்தான் பதிலடி தாக்குதல் உச்சம்



10

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2057 | சித்திரை 27 | வெள்ளிக்கிழமை | 09.05.2025 | அதிர்வு 278

# புதிய பாப்பரசராக ரொபர்ட் பிரீவோஸ்ட் தெரிவு



புதிய போப்பாண்டவராக அமெரிக்கரான ரொபர்ட் பிரீவோஸ்ட் தெரிவு செய்யப்பட்டுள்ளார் என வத்திக்கான் அறிவித்துள்ளது.

உலகளவில் கவனத்தை ஈர்த்துள்ள புதிய போப்பைத் தேர்ந்தெடுப்பதற்கான இரகசிய வாக்கெடுப்பு நேற்று முடிவடைந்ததுடன், வத்திக்கானின் சிஸ்டைன் தேவாலய புகைபோக்கியில் இருந்து வெள்ளைப்புகை வெளியானது.

வெளியான வெள்ளைப்புகை சமிஞ்சையின்படி, கர்தினால்கள் போப் பிரான்சிஸ்'க்குப் பிறகு ஒரு வாரிசைத் தேர்ந்தெடுத்துள்ளனர் என்பது உறுயானது.

இதன்படி, புதிய போப் அமெரிக்கரான ரொபர்ட் பிரீவோஸ்ட் தெரிவு

04

### வடக்கு, கிழக்கில் இணைந்து ஆட்சி அமைப்பது தொடர்பில்

# தமிழ்க் கட்சிகள் பேச்சு நடத்தினால் ஆழமாக ஆராய்ந்த பின்னர் முடிவு!



## அநுர அரசு அறிவிப்பு

**"வடக்கு, கிழக்கில் இணைந்து சபைகளை நிறுவுவது குறித்து தமிழ்க் கட்சிகள் உத்தியோகபூர்வமாக எந்த அறிவித்தலையும் அரசுக்கு வழங்கவில்லை. தமிழ்க் கட்சிகள் எம்முடன் பேச்சு நடத்தினால் ஆழமாக ஆராய்ந்த பின்னரே எந்தவொரு தீர்மானமும் எடுக்கப்படும்."**

**- இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.**

06

# தேசிய மக்கள் சக்தியுடன் டீல் பேசி ஆட்சி அமைப்பவர்கள் துரோகிகள்

(எஸ்.நிதர்ஷன்)

தமிழர் தாயகத்தில் தேசிய மக்கள் சக்தியுடன் டீல் பேசி ஆட்சி அமைப்போர் தமிழினத் துரோகிகள் என்று தமிழ் மக்கள் கூட்டணியின் முக்கியஸ்தரும் யாழ்ப்பாணம் மாநகர சபையின் முன்னாள் மேயருமான சட்டத்தரணி வி.மணிவண்ணன் தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

"தமிழர் பிரதேசங்களின் சில இடங்களில்

06

### மணிவண்ணன் அணி விளாசல்







வடக்கில் காரைநகர் மக்கள் சற்று வித்தியாசமானவர்கள். விசித்திரமானவர்களும் (Peculiar Character) கூட. அவர்களது தொழில்வாண்மை, சேமிப்புப் பண்பு, சளைக்காமல் உழைத்தல் போன்றவை சிலாகிக்கப்படுவதுண்டு.

இப்போது இன்னொரு விடயத்தில் – விதத்தில் – அவர்களின் தெரிவு விசித்திரமாக வெளிப்பட்டிருக்கிறது.

உளளூராட்சித் தேர்தலைப் பொறுத்தவரை மற்றத் தேர்தல்களில் இருந்து அது சற்று வித்தியாசமானது. வேட்பாளர் தேர்வுகளிலும் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களிலும் மகளிருக்கு விசேடமாக இடம் ஒதுக்கும் சட்ட ஏற்பாடுகளை அந்தத் தேர்தல் முறைமை கொண்டுள்ளது.

வேட்பாளர்களில் 25 வீதமானோர் அல்லது கால் பங்கினர் நிச்சயமாக பெண்களாக இருக்க வேண்டும். அப்படி இருந்தால் மட்டுமே வேட்புமனு ஏற்றுக் கொள்ளப்படும்.

ஒரு கட்சி அல்லது சுயேச்சை குழு ஒன்று சார்பில் தேர்ந்தெடுக்கப்படும்

06

# வன்னியில் வாக்குப் பெறுவதற்கு தமிழரசு கசிப்பு விநியோகித்து காசும் கொடுத்ததாம்!




## அமைச்சர் பிமல் சபையில் நேற்றுக் குற்றச்சாட்டு

வன்னியில் வாக்கு கூட்டுவதற்கு தமிழ் அரசுக் கட்சி கசிப்பு விநியோகித்தது காசு கொடுத்தது என்பதனை நான் பொறுப்போடு சொல்கின்றேன். இது இங்கிருப்பவர்களிற்கும் தெரியும்.

– இவ்வாறு நாடாளுமன்றத்தில் நேற்றுப் பேசுகையில் குற்றம் சுமத்தினார் அமைசரும் அரசுத் தரப்பில் சபை முதல்வருமான பிமல் ரத்நாயக்கா.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

"தமிழரசுக் கட்சி வாக்குகளை பெறுவதற்காக கசிப்பு வழங்கினார்கள். அத்துடன், மக்களுக்கு பணத்தையும் வழங்கி தேர்தலில் வெற்றி பெறுவதற்காக இனவாதக் கருத்துக்களையும் பயன்படுத்தினர்.

அவை கூறுவதற்கு தகுந்த வார்த்தைகள் அல்ல என்ற காரணத்தினால் நான் அவற்றை இங்கு சுட்டிக்காட்ட விரும்பவில்லை.

நாங்கள் நினைத்திருந்தால் எங்களாலும் பணத்தை வழங்கியிருக்க முடியும். ஆனால், நாங்கள் அதனை செய்யவில்லை. எனினும், தூய்மையான அரசியலை செய்து நாங்கள் வவுனியாவிலும் மன்னாரிலும் வெற்றி பெற்றுள்ளோம்." – என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# கசிப்பும் பணமும் கொடுத்ததை ஆதாரங்களுடன் நாடாளுமன்றுக்கு வெளியில் வந்து நிரூபியுங்கள்

## அமைச்சர் பிமல் ரத்நாயக்காவுக்கு சுமந்திரன் சவால்



"கசிப்பும் பணமும் கொடுத்து தமிழ் அரசுக் கட்சி வாக்கு சேகரித்து என்பதை அமைச்சர் விமல் ரட்நாயக்க நாடாளுமன்றுக்கு வெளியில் வந்து ஆதாரங்களுடன் நிரூபித்துக் காட்ட வேண்டும்"

இவ்வாறு வலியுறுத்தி சவால் விடுத்தார் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளரான முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன்.

பிமல் ரத்நாயக்காவின் குற்றச்சாட்டுக்குப் பதிலளிக்கும் விதத்தில் கருத்துக் கூறிய எம்.ஏ.சுமந்திரன் மேலும். தெரிவித்தவை வருமாறு:–

சலுகைகளுக்காக வாக்களிப்பவர்கள் தமிழ் மக்கள் என்று பிழையான எண்ணத்தை அவர் கொண்டுள்ளார்.

நேற்று வியாழக்கிழமை நாடாளுமன்றத்தில் கடும் ஆவேசத்துடன் பேசிய விமல் ரட்நாயக்க, இலங்கை தமிழ் அரசுக் கட்சி கசிப்பும் பணமும் வழங்கி தேர்தலில் அதிகளவு வாக்குகளை பெற்றதாக குறிப்பிட்டார்.

இலங்கை தமிழ் அரசுக் கட்சி சாத்வீகக் கட்சி மாத்திரமல்ல, சமூக அக்கறையுள்ள கட்சியுமாகும். அது அமைச்சர் பிமல் ரத்நாயக்காவுக்கு தெரியவில்லை. 75 ஆண்டுகளுக்கு மேலான தமிழ் அரசுக் கட்சியின் வரலாற்றை அமைச்சர் பிமல் ரத்நாயக்கா எடுத்துப் பார்க்க வேண்டும்.

மது ஒழிப்புக்காக இயக்கத்தை கட்சி கொண்டுள்ளதுடன. இது தொடர்பில் பல விழிப்புணர்வு நடவடிக்கைகளையும் முன்னெடுத்துள்ளது.

அதனால்தான் மதுபான சாலைகளை புதிதாக அமைப்பதற்கு எதிராக போராட்டங்களை முன்னெடுப்பதுடன் நீதிமன்றங்கள் ஊடாக அவற்றை தடுக்க நடவடிக்கைகளும் எமது கட்சியால் முன்னெடுக்கப்படுகிறது.

முன்னைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசியல் சலுகையாக வழங்கியிருந்த மதுபான அனுமதிப் பத்திரங்களுக்கான சிபார்சை பெற்ற அரசியல்வாதிகளின் பெயர்களை ஜனாதிபதியாக அநுரகுமார திசாநாயக்க தெரிவான மூன்றாம் நாள் வெளியிடுவோம் என அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்திருந்தார். ஆனால் இன்னும் அதனை வெளியிடவில்லை. யார் மீதான பயத்தினாலோ 6 மாதங்கள் கடந்தும் அதனை அவர் வெளியிடவில்லை.

அதனால்தான் இந்த மதுபான டீலர்களுக்கும் இந்த ஆட்சியாளர்களுக்கும் தொடர்புகள் இருக்கலாம் என்ற சந்தேகத்தை நாம் முன்வைத்து வருகின்றோம். வன்னியில்தான் அத்தகைய மதுபானச் சாலைகள் அதிகம் திறக்கப்பட்டன. அதனைப் பெற்றவர்களின் விவரங்களை மூடி மறைத்து, இத்தகைய செய்திகளை வன்னியைச் சுட்டி, கற்பனையில் வெளியிடுவதில் ஏதோ அர்த்தம் பொதிந்திருக்கின்றன என நாம் சந்தேகிக்கின்றோம்.

தேசிய மக்கள் சக்தி மீது தமிழ் மக்கள் கொண்டுள்ள வெறுப்பினை சகிக்க முடியாமல் அவர்களது உணர்வுகளை அவமதித்து பிழையான சாட்டுதல்களை அமைச்சர் பிமல் ரத்நாயக்க வெளியிட்டுள்ளார். இது அவரது அரசின் சிறுமையை வெளிப்படுத்துகிறது.

எனவே தமிழ் அரசுக் கட்சி மீதான இந்தக் குற்றச்சாட்டை நாடாளுமன்றுக்கு வெளியில் ஆதாரங்களுடன் அமைச்சர் விமல் ரத்நாயக்க வெளிப்படுத்த வேண்டும்.

அத்தோடு சலுகைகளுக்காகவும் கைமாறுக்காகவும் விலை போனவர்கள் தமிழர்கள் என்று இதுநாள் வரை அவர் கொண்டுள்ள எண்ணம் மிகத் தவறானது – சிறுமையை வெளிப்படுத்துகிறது – என்றார்.





# கிளிநொச்சி மத்திய பஸ் நிலையக் காணி விவகாரம்: ஆளுநர் தலைமையில் மாவட்ட செயலகத்தில் கூட்டம்

கிளிநொச்சி மாவட்ட மத்திய பஸ் நிலையக் காணியை உள்ளூராட்சி மன்றத்துக்கு கையளிப்பதற்கும், உள்ளூராட்சி மன்றத்தால் அங்கு கடைத்தொகுதி அமைக்கப்பட்ட பின்னர் தற்போது பஸ் நிலையத்தில் கடைகளை அமைத்துள்ளவர்களுக்கு அதனை முன்னுரிமையில் வழங்குவதற்கும் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையில் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நேற்று வியாழக்கிழமை தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சிமாவட்டமத்தியபஸ்நிலையத்தை வடக்கு மாகாண ஆளுநர் நேற்று காலை நேரடியாகச் சென்று பார்வையிட்டார். பஸ் நிலையத்துக்கு ஒதுக்கப்பட்ட காணிகள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் அவருக்குத் தெரியப்படுத்தப்பட்டது. இதன் பின்னர் தொடர்புடைய தரப்புக்களுடன் மாவட்டசெயலக மாநாட்டு மண்டபத்தில் கலந்துரையாடல் நடைபெற்றது.

ஆரம்பத்தில் கருத்துத் தெரிவித்த கிளிநொச்சி மாவட்ட செயலர் சு.முரளிதரன், "இந்த பஸ் நிலையத்தின் காணியின் உரிமையை யாருக்கு வழங்குவது மற்றும் அந்தக் காணியை எப்படிப் பயன்படுத்துவது என்பது தொடர்பில் ஆராய்வதற்கே இந்தக் கலந்துரையாடல் ஒழுங்கு செய்யப்பட்டது. இந்தக் காணியை வெவ்வேறு தரப்புக்கள் ஆக்கிரமித்து காணியின் அளவு குறைவடைந்துள்ளது." – என்று குறிப்பிட்டார்.

மேலும் எந்தவொரு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படாமையால் அங்கு சட்டவிரோதச் செயல்களும் நடைபெறுகின்றன என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

நீண்ட கால நோக்கில் திட்டமிட்டு தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்திய ஆளுநர், யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்துக்கு ஏற்பட்டுள்ள நிலைமை இங்கும் ஏற்படக் கூடாது எனக் குறிப்பிட்டார்.

கிளிநொச்சி நகரம் வேகமாக வளர்ச்சியடைந்து வருகின்றமையை கவனத்தில் எடுக்க வேண்டும் எனச் சுட்டிக்காட்டிய ஆளுநர் ஆக்கிரமிப்பாளர்களை அகற்றி பஸ் நிலையத்துக்கு ஒதுக்கப்பட்ட நோக்கத்தை நிறைவேற்ற வேண்டும் என்கிறார்.

வடக்கு மாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் பொது முகாமையாளர் பி.ஜெயராஜ், "வடக்கின் ஏனைய மாவட்டங்களில் பஸ் நிலையங்கள் உள்ளூராட்சி மன்றங்களின் பொறுப்பில்தான் உள்ளன. இந்த பஸ் நிலையத்தின் பராமரிப்பு மாத்திரம் எங்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. இதனை முன்னெடுப்பது எமக்குப் பெரும் சவாலாக இருந்து வருகின்றது. அதனை உள்ளூராட்சி மன்றத்துக்கு வழங்க எங்களுடைய முகாமைத்துவ சபையும் அனுமதி வழங்கியுள்ளது." – என்று குறிப்பிட்டார்.

கரைச்சிப் பிரதேச சபையின் செயலாளர், பஸ் லையத்தின் காணியைப் பராமரிப்பதற்கு அதிக செலவாகும் என்பதைக் குறிப்பிட்டதுடன் வருமானம் எதுவுமின்றி அதைச் செய்ய முடியாது எனவும் குறிப்பிட்டார். அதேநேரம் பஸ் நிலையத்தினுள் அமைக்கப்பட்டுள்ள கடைகள் பிரதேச சபையின் அனுமதியின்றிக் கட்டப்பட்டதுடன் அதற்கான வாடகை எதுவும் பெற்றுக்கொள்ளப்படவில்லை எனவும் தெரியப்படுத்தினார். அதேபோல் அந்தக் கடைகளுக்கான அனுமதி எவையும் வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபை வழங்கவில்லை என்றும், சபைக்கும் அதனால் எந்த வருமானமும் இல்லை என்றும் சபையின் தலைவர் க.மகேஸ்வரன் குறிப்பிட்டார்.

இதன் பின்னர் கருத்துத் தெரிவித்த ஆளுநர், ஏனைய மாவட்டங்களில் உள்ளதைப்போன்று மத்திய பேருந்து நிலையத்தின் காணி உரிமத்தை கரைச்சிப் பிரதேசசபைக்கு வழங்குவதற்கும், கரைச்சிப் பிரதேச சபையால் பஸ் நிலையத்தின் எல்லைப் பகுதியில் கடைகள் அமைக்கப்பட்டு அங்கு முன்னுரிமை அடிப்படையில் தற்போது கடைகள் அமைத்துள்ளவர்களுக்கு வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்குமாறும், அதுவரையில் தற்போது கடைகளை அமைத்துள்ளவர்கள் பிரதேச சபைக்கு நிலவாடகை செலுத்தவேண்டும் எனவும் ஆளுநர் குறிப்பிட்டார்.

இதே நிலைப்பாட்டை வலியுறுத்திய வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலர் அ.சோதிநாதன், கட்டுப்பாடான பஸ் நிலையத்தை உருவாக்குவதற்கு அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைக்கவேண்டும் என்று கோரினார்.

ஆளுநர் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவுக்குச் சமர்பிக்கப்படும் என்று மாவட்டச் செயலர் குறிப்பிட்டார்.

இந்தக் கலந்துரையாடலில் கிளிநொச்சி மாவட்ட மேலதிக மாவட்ட செயலர், உள்ளூராட்சி உதவி ஆணையாளர், கிளிநொச்சி தனியார் பஸ் உரிமையாளர் சங்கத் தலைவர், மத்திய பஸ் நிலையத்தில் கடைகளை அமைத்துள்ளவர்கள் ஆகியோரும் பங்கேற்றனர்.











# புதிய பாப்பரசராக..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

செய்யப்பட்டுள்ளார் என வத்திக்கான் அறிவித்துள்ளது.

இவர் வரலாற்றிலேயே முதல் முறையாகத் தெரிவு செய்யபப்பட்ட முதல் அமெரிக்க போப்பாண்டவர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனையடுத்து புதிய போப்பாண்டவர் செயிண்ட் பீட்டர்ஸ் சதுக்கத்தை நோக்கிய மாடியில் தோன்றினார்.

முன்னதாக, புதிய போப் சிஸ்டைன் தேவாலயத்திற்கு அடுத்துள்ள ஒரு சிறிய அறைக்கு அழைத்துச் செல்லப்பட்டு வெள்ளை போப்பாண்டவர் அங்கிகள் அணிவிக்கப்பட்டார்.

70 நாடுகளிலிருந்து வந்த 133 கர்தினால்கள் புதிய போப்பாண்டவரைத் தெரிவு செய்தமைக்கான இரகசிய வாக்கெடுப்பில் பங்கேற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.












# மாணவியின் உயிர்மாய்ப்பை அநுர அரசு அலட்சியப்படுத்துவதன் நோக்கம் என்ன?

## நாடாளுமன்றில் நாமல் எம்.பி. கேள்வி



"பாடசாலை மாணவியின் தற்கொலையுடன் தேசிய மக்கள் சக்தியின் கொழும்பு மத்திய அமைப்பாளரின் பெயர் குறிப்பிடப்படுகின்றது. இவரைப் பாதுகாப்பதற்கு அநுர அரசு இந்த விடயத்தை அலட்சியப்படுத்துகின்றதா என்ற சந்தேகம் எழுகின்றது. மாணவியின் உளவியல் தொடர்பில் மருத்துவ அதிகாரிகள் சங்கம் எவ்வாறு அறிக்கை சமர்ப்பிக்க முடியும்.?"

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழ் "அ" அட்டவணையின் ஒழுங்கு விதிகளின் கீழ் இறக்குமதித் தீர்வைக் கட்டணங்கள் தொடர்பில் பிரசுரிக்கப்பட்ட வர்த்தமானி அறிவித்தல்கள் தொடர்பான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே நாமல் எம்.பி. மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

"மக்களுக்குப் பல போலியான வாக்குறுதிகள் மற்றும் பொய்களைக் குறிப்பிட்டு ஆட்சியமைத்த அரசு இன்று திண்டாடுகின்றது. தேர்தல் காலத்தில் நாம் பொய்யுரைக்கவில்லை. இயலுமானதையே குறிப்பிட்டோம். சவால்களுக்கு மத்தியில் போட்டியிட்டு வெற்றி பெற்றோம். எமக்கு வாக்களித்த மக்களுக்கு எமது நன்றிகள். அரசியலில் மீண்டும் எழுச்சி பெற்றுள்ளோம்.

பல்கலைக்கழகங்கள் மற்றும் பாடசாலைகளில் உளவியல் ரீதியான பாதிப்புக்களினால் மாணவர்கள் பாதிக்கப்பட்டு தற்கொலை செய்யும் நிலை காணப்படுகின்றது.

அண்மையில் பல்கலைக்கழக மாணவர் ஒருவர் பகிடிவதையால் பாதிக்கப்பட்டு தற்கொலை செய்துகொண்டார். மக்கள் விடுதலை முன்னணிக்குப் பகிடிவதை தொடர்பில் புதிதாக எதையும் குறிப்பிடத் தேவையில்லை.

அவர்கள் பகிடிவதைகள் தொடர்பில் ஏனையவர்களுக்கு பாடம் கற்பிப்பார்கள். ஏனெனில், பல்கலைக்கழகங்களில் பகிடிவதையின் கர்த்தாக்கள் அவர்கள்தான். தமது அரசியல் தேவைக்காகப் பல்கலைக்கழகங்களில் பகிடிவதைகளை வன்முறையாக மாற்றியமைத்தார்கள்.

கொழும்பில் பாடசாலை மாணவி ஒருவர் தற்கொலை செய்துகொண்ட விடயம் தற்போது பிரதான பேசுபொருளாகியுள்ளது. எமது சக உறுப்பினர் மனோ கணேசன் அந்த மாணவி தொடர்பில் இங்கு பேசினார். அதற்கு விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் பதிலளித்தார்.

இந்த மாணவியின் உளவியல் தொடர்பில் மருத்துவ அதிகாரிகள் சங்கம் அறிக்கை சமர்ப்பித்துள்ளது என்று அமைச்சர் குறிப்பிட்டார். மருத்துவ அதிகாரிகள் சங்கம் எவ்வாறு உளவியல் பரிசோதனை அறிக்கை சமர்ப்பிக்க முடியும்? இதனை எம்மால் விளங்கிக்கொள்ள முடியவில்லை.

இந்தச் சம்பவத்துடன் தேசிய மக்கள் சக்தியின் கொழும்பு மத்திய அமைப்பாளரின் பெயர் குறிப்பிடப்படுகின்றது. இந்த விவகாரத்தில் அவரைப் பாதுகாப்பதற்காக அநுர அரசு கவனம் செலுத்தாது அலட்சியப்படுத்துகின்றதா என்ற சந்தேகம் எழுகின்றது. இதனை அரசியலாக்க வேண்டிய தேவை எதிர்க்கட்சிகளுக்குக் கிடையாது. உயிரிழந்த மாணவிக்கு நீதியைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுங்கள். அதை விடுத்து பேசுபொருளாக்கும் சூழ்நிலையை ஏற்படுத்தாதீர்கள்.

ஓரிரு நாட்களுக்கு முன்னர் கல்கிஸையில் 19 வயது இளைஞர் பகல் வேளையில் பிரதான வீதியில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கூறுகையில், "இந்த இளைஞரின் தாயார் போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபடுகின்றார். அதனால்தான் இந்தக் கொலை இடம்பெற்றுள்ளது" – என்று கூறினார்.

இவ்வாறு இப்படிக் கூற முடியும்? முறையான விசாரணைகள் நடந்ததன் பின்னரா இவ்வாறு அவர் குறிப்பிட்டார்? தாய் போதைப்பொருள் வியாபாரி என்றால் அந்த இளைஞர் ஏன் இளம் வயதில் வீதிகளைத் துப்பரவு செய்ய வேண்டும்? அவர் கோடீஸ்வரராக அல்லவா இருந்திருப்பார்? பொலிஸ் ஊடகப் பேச்சாளரின் கருத்து இந்தக் கொலையை நியாயப்படுத்தும் வகையில் அமைந்துள்ளது.

போதைப்பொருளுடன் தொடர்புபட்டிருந்தாலும் நடுவீதியில் வைத்து சுட்டுக் கொல்ல முடியுமா? தேசிய பாதுகாப்பு தொடர்பில் பாடம் கற்பிப்பதாகக் கூறிக்கொண்டு வந்தவர்களுக்கு இன்று தனிமனித பாதுகாப்பு தொடர்பில் கூறவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது." – என்றார்.

# நாடாளுமன்ற உறுப்பினராக சமந்த சத்தியப்பிரமாணம்



தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினராக சமந்த ரணசிங்க நேற்று சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன முன்னிலையில் நாடாளுமன்ற உறுப்பினராக சமந்த ரணசிங்க சத்தியப்பிரமாணம் செய்தார்.

தேசிய மக்கள் சக்தியின் கேகாலை மாவட்டத்தின் மறைந்த நாடாளுமன்ற உறுப்பினர் கோசல நுவான் ஜெயவீரவின் பதவி வெற்றிடத்திற்காக சமந்த ரணசிங்க நியமிக்கப்பட்டுள்ளார்.



# அதிகரிப்பை பதிவு செய்த கொழும்பு பங்குச் சந்தை

கொழும்புபங்குச்சந்தையின்அனைத்துப் பங்கு விலைச் சுட்டெண் நேற்று அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளது.

அதனடிப்படையில், அனைத்துப் பங்கு விலைச் சுட்டெண் 84.32 புள்ளிகளால் அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளது.

அந்தவகையில், கொழும்பு பங்குச் சந்தையின் அனைத்துப் பங்குகளின் மொத்த விலைச் சுட்டெண் இன்று 15,925.92 புள்ளிகளாகப் பதிவாகியுள்ளது.

அதன்படி, கொழும்பு பங்குச் சந்தையின் மொத்தப் புரள்வானது இன்றைய தினம் 1.7 பில்லியன் ரூபாவாக பதிவாகியுள்ளது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உறுப்பினர்களில் கால்பங்கினர் நிச்சயமாக மகளிராக இருக்க வேண்டும். அப்படி இல்லாவிடில் அதற்குப் பின்னர் அந்த கட்சிக்கு அல்லது சுயேச்சை குழுவுக்கு அந்த சபையில் கிடைக்கக்கூடிய பட்டியல் மூலமான உறுப்பினர் தெரிவுக்கு, அந்தக் கால் பங்கு வீதம் நிறைவடையும் வரை முன்னுரிமை அடிப்படையில் மகளிருக்கு இடம் அளிக்கப்பட வேண்டும்.

ஆனால் இந்தச் சட்ட விதிகளை எல்லாம் மீறிக் கொண்டு இந்தத் தடவை காரைநகர் பிரதேச சபைக்கு பெரும்பாலும் தெரிவாகும் அனைத்து உறுப்பினர்களும் ஆண்களாக இருக்கக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது. இலங்கையில் தேர்தல் நடந்த 339 உள்ளூராட்சி சபைகளிலும் காரைநகர் பிரதேச சபைக்கு மட்டுமே இப்படித் தனி ஆண்கள் உறுப்பினர்களாக வரும் வாய்ப்பு ஏற்பட்டிருப்பதாகவும் சுட்டிக் காட்டப்படுகின்றது.

பட்டியல் வாயிலான தெரிவின் மூலம் மகளிருக்குக் கால்பங்கு இடம் அளிக்கப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும் என்றாலும், மொத்தம் இரண்டுக்குக் குறைந்த உறுப்பினர்களைக் கொண்ட அணிக்கு அல்லது சுயேச்சை குழுவுக்கு இந்த கட்டுப்பாடு வராது. இரண்டுக்கும் அதிகமான உறுப்பினர்களைக் கொண்ட கட்சிக்கு அல்லது சுயேச்சைக் குழுவுக்கு மட்டுமே இப்படி மகளிருக்குக் கால் பங்கு ஒதுக்கும் விதிமுறை கட்டாயமாகும்.

காரைநகர் பிரதேச சபைக்கு ஒரு சுயேச்சை குழு உட்பட ஐந்து தரப்புக்கள் தலா இரண்டு உறுப்பினர்களையும் தமிழரசுக் கட்சி ஓர் உறுப்பினரையும் பெற்றுள்ளன.

தெரிவான உறுப்பினர்களில் எவரும் மகளிர் அல்லர். பட்டியல் மூலம் உறுப்பினரை நியமிக்கும் வாய்ப்புக் கிடைத்த கட்சிகள் இரண்டுக்குக் குறைந்த உறுப்பினர்களையே சபையில் கொண்டிருக்கப் போகின்றன. ஆகையினால் அந்தத் தரப்பினரும் பட்டியல் மூலம் மகளிரைத் தான் நியமிக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. அவர்களும் ஆண்களைப் பட்டியல் மூலம் உறுப்பினர்களாக நியமிக்க முடியும்.

அப்படி நேர்ந்தால், இலங்கையில் இம்முறை தெரிவான 339 உள்ளூராட்சி சபைகளில் காரைநகர் பிரதேச சபை மட்டுமே அல்லி ராஜ்ஜியத்திற்கு இடம் அளிக்காத சபையாக விளங்கும்...!

**திருத்தம்**

நான் எழுதிய இந்தத் தகவல் தவறு என்று காரைநகரைச் சேர்ந்த வாசகர் ஒருவர் இன்று காலையில் தொலைபேசி மூலம் தெரிவித்தார். அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் சார்பில் அங்கு ஒரு வட்டாரத்தில் தெரிவானவர் பெண் என்று அவர் குறிப்பிட்டார். அதனை என்னால் உடனடியாக உறுதிப்படுத்த முடியாத போதிலும் அந்த தகவலை வாசகர்களுக்கு சமர்ப்பிக்கிறேன்.

## தமிழ்க் கட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற மைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

“ஜனாதிபதித் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல், உள்ளூராட்சி சபைத் தேர்தல் என்பன ஒன்றிலிருந்து ஒன்று வேறுபட்டவையாகும். இந்த மூன்று தேர்தல்களிலும் மக்களின் நடத்தை வேறுபட்டதாகவே காணப்படும். அந்தந்தத் தேர்தல்களுடனேயே ஒப்பீடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அவ்வாறு நாடாளுமன்றத் தேர்தலுடன் உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஒப்பிட்டு பார்ப்பதாயின் கடந்த தேர்தலில் 32 சதவீத வாக்குகளைப் பெற்றுக்கொண்ட சஜித் பிரேமதாஸ இம்முறை 21 சதவீத வாக்குகளையே பெற்றிருக்கின்றார்.

சஜித் பிரேமதாஸ தோல்வியடைந்த ஜனாதிபதித் தேர்தலில் பெற்றுக்கொண்ட வாக்குகளை இந்தத் தேர்தலில் உறுதிப்படுத்திக் கொள்ள முடியாது போயுள்ளது.

அவ்வாறெனில் அவர் பாரிய பின்னடைவைச் சந்தித்திருக்கின்றார் என மதிப்பிட முடியுமல்லவா? வரலாற்றில் தனியொரு கட்சி அதிகளவான சபைகளைக் கைப்பற்றியிருக்கின்றது. 266 சபைகளை அரசு கைப்பற்றியிருக்கின்றது. வரலாற்றில் எந்தவொரு கட்சியும் இவ்வாறான வெற்றியைப் பெற்றிருக்கவில்லை.

இவை தவிர மேலும் பல சபைகளை அமைப்பதற்கான வாய்ப்பும் அரசுக்குக் காணப்படுகின்றது. தேசிய மக்கள் சக்தி வெற்றி பெறவில்லை எனக் கூறப்படும் அகலவத்தை பிரதேச சபையில் 20 உறுப்பினர்களில் 6 தேசிய மக்கள் சக்தியும், 6 ஐக்கிய மக்கள் சக்தியும் பெற்றுள்ளன. இருவருக்கும் சபைகளை அமைப்பதற்கான வாய்ப்புள்ளது.

இவ்வாறு பல சபைகள் காணப்படுகின்றன. ஐக்கிய மக்கள் சக்தியின் மேயர் வேட்பாளர் தாம் போட்டியிட்ட தொகுதியில் கூடத் தோல்வியடைந்துள்ளார்.

சஜித் பிரேமதாஸ 14 சபைகளில் தமது தரப்பு வெற்றி பெற்றுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். ஆனால், அவற்றில் ஒன்றில் கூட ஏனைய கட்சிகளின் ஒத்துழைப்பின்றி அவர்களால் சபைகளை நிறுவ முடியாது. ஐக்கிய மக்கள் சக்தி தனித்து வெற்றி பெறவில்லை. ஆனால், அரசுக்கு 266 சபைகளை மக்கள் வழங்கியிருக்கின்றனர்.

வடக்கு, கிழக்கில் இணைந்து சபைகளை நிறுவுவது குறித்து தமிழ்க் கட்சிகள் உத்தியோகபூர்வமாக எந்த அறிவித்தலையும் அரசுக்கு வழங்கவில்லை. அதிகபட்ச சபைகளை நிறுவுவதே அரசின் எதிர்பார்ப்பாகும். தமிழ்க் கட்சிகள் எம்முடன் பேச்சு நடத்தினால் ஆழமாக ஆராய்ந்த பின்னரே எந்தவொரு தீர்மானமும் எடுக்கப்படும்.” – என்றார்.

## தேசிய மக்கள்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தேசிய மக்கள் சக்தியினரும் கணிசமான ஆசனங்களைப் பெற்றுள்ளார்கள். அவர்களுடன் தமிழ்த் தேசியக் கட்சிகள் கூட்டிணைந்து ஆட்சி அமைக்கக்கூடாது.

தேசிய மக்கள் சக்தியினரைப் புறக்கணிக்க வேண்டும் என நாம் உட்பட ஏனைய தமிழ்த் தேசியக் கட்சியினரும் மக்களிடம் கோரி வந்தன. அதனை மக்கள் ஏற்று பல இடங்களில் தேசியமக்கள் சக்தியைப் புறக்கணித்துள்ளார்கள்.

தற்போது சபைகளில் ஆட்சி அமைக்கும்போது அவர்களாக ஆதரவு வழங்குவது அவர்களின் ஜனநாயக உரிமை. ஆதரவு தருகின்றோம் என்பவரை ஆதரவு தராதே எனக் கூற முடியாது.

ஆனால் ஆதரவு தாருங்கள், துணை தவிசாளர் மற்றும் துணை மேயர் பதவிகள், இந்தச் சபைக்கு ஆதரவு தாருங்கள், அந்தச் சபைக்கு நாம் ஆதரவு தருகின்றோம் என்பது போலான டீல்கள் செய்து, தேசிய மக்கள் கட்சியுடன் இணைந்து தமிழ்த் தேசியக் கட்சிகள் ஆட்சி அமைந்தால் அது தமிழ் மக்களுக்குத் செய்யும் துரோகம்.” – என்றார்.



# உயிர்மாய்த்த மாணவி குறித்து அவதூறு: அமைச்சர் சரோஜாவைக் கண்டித்த மனோ

கொழும்பு, கொட்டாஞ்சேனையில் உயிர்மாய்த்த மாணவி மனநோயாளி அல்லர் எனவும், அவ்வாறு கூறியமைக்காக மகளிர் விவகார அமைச்சர் மன்னிப்புக் கோர வேண்டும் எனவும் நாடாளுமன்றத்தில் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் மனோ கணேசன் எம்.பி வலியுறுத்தினார்.

மேலும், அந்த வார்த்தைப் பிரயோகத்தை நாடாளுமன்ற ஹன்சார்ட்டில் இருந்து அகற்ற வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்தார்.

கொட்டாஞ்சேனை மாணவி குறித்து நேற்று நாடாளுமன்றத்தில் உரையாற்றிய மனோ கணேசன் எம்.பிக்குப் பதிலளித்த சிறுவர் விவகார அமைச்சர் சரோஜா போல்ராஜ், அந்த மாணவி தொடர்பான விவரங்களை முன்வைத்ததுடன், பெற்றோர்களை விசாரணைக்கு வருமாறு அழைத்ததாகவும், ஆனால் அவர்கள் அமைச்சுக்கு சமூகமளிக்கவில்லை எனவும் கூறினார்.

அதற்குப் பதிலளித்த மனோ கணேசன் எம்.பி., அமைச்சு அதிகாரிகள் பாதிக்கப்பட்டவர்களை நேரில் சென்று விசாரிக்க வேண்டுமே தவிர, அவர்கள் உங்களிடம் வரும் வரை காத்திருக்க வேண்டுமா என்று சாடினார்.

அத்துடன் உயிர்மாய்த்த மாணவி மனநோயாளி என்று கூறியமைக்காக அமைச்சர் சரோஜா மன்னிப்புக் கோர வேண்டும் என்றும் அவர் கேட்டார்.

மனோ கணேசன் எம்.பி. மேலும் கூறுகையில்,

“இந்தச் சம்பவம் தொடர்பாக நீதியான விசாரணை நடைபெற வேண்டும். குறிப்பிட்ட மாணவிக்கு மன உளைச்சல் ஏற்பட்டிருக்கின்றது. அது உண்மை. இன்று (நேற்று) அந்த மாணவிக்கு நீதி கேட்டு போராட்டம் நடக்கும் இடத்தில் பொலிஸ் நீர்த்தாரைப் பிரயோக வாகனங்கள் நிறுத்தப்பட்டுள்ளன. கண்ணீர்ப் புகைப் பிரயோகத் தாக்குதலுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அப்படிச் செய்யாதீர்கள். அது தவறு.” – என்றார்.

இதற்குப் பதிலளித்த பொதுமக்கள் பாதுகாப்பு பிரதி அமைச்சர் சுனில் வட்டகல, இந்தச் சம்பவம் குறித்து நீதியான விசாரணைகள் நடைபெறுகின்றன என்று குறிப்பிட்டார்.

அதன் பின்னர் பேசிய அமைச்சர் சரோஜா, மருத்துவ அறிக்கை மற்றும் விசாரணை அறிக்கைகளின் அடிப்படையிலேயே தான் பேசியதாகவும், தவறாக எதையும் குறிப்பிடவில்லை என்றும் தெரிவித்தார்.


உ

குருபாதம் துணை

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

இரண்டாவது குரு மகா சன்னிதானம்

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிகள் சுவாமிகள்

நினைவு பிரார்த்தனை வைபவமும் அஸ்தி பிரதிஷ்டையும்

09.05.2025 வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு சுவாமிகளின் நினைவு பிரார்த்தனையும், அஸ்தி பிரதிஷ்டையும், மதியம் 12 மணிக்கு அன்னதானமும் நடைபெறும்.

அனைவரையும் கலந்து கொண்டு சுவாமியின் திருவருளை பெற்றுய்யுமாறு வேண்டுகிறோம்.



ஆதீன ஆளுநர் சபை,

நல்லை ஆதீனம், நல்லூர், யாழ்ப்பாணம்













## மக்கள் ஆணைக்குத் தலைவணங்குகின்றோம்

# தமிழரசின் எம்.பி. சிறீதரன் தெரிவிப்பு

நடைபெற்று முடிந்த உள்ளூர் அதிகார சபைகள் தேர்தலில் தமிழ்த் தேசியப் பயணத்தை ஏற்று இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு மக்கள் வழங்கிய ஆணைக்குத் தலைவணங்குகின்றேன் என்று நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவருமான சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் மூன்று சபைகளிலும் இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் போட்டியிட்ட வேட்பாளர்களுடனான சந்திப்பு, கட்சியின் மாவட்டப் பணிமனையில் நடைபெற்றபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“அண்மைய தேர்தல்களைக் காட்டிலும், இந்தத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு எமது மக்கள் வாக்குகளால் வலுச்சேர்த்திருக்கின்றார்கள். அதிலும் குறிப்பாக கிளிநொச்சி மாவட்டத்தில் எமது கட்சிக்கு வாக்களித்து, கரைச்சி, பச்சிலைப்பள்ளி, பூநகரி ஆகிய சபைகளில் நாம் ஆட்சியமைக்க காரணமாக இருந்த மக்களுக்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மக்களின் ஆணைக்கு மதிப்பளித்து, அவர்களின் மன உணர்வுகளோடு இணைந்த வகையில் எமது தமிழ்த் தேசிய அரசியல் பயணம் தொடரும்.” – என்றார்.

இந்தச் சந்திப்பில் கலந்துகொண்ட வேட்பாளர்கள், கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயத்திலும், புனித திரேசாள் தேவாலயத்திலும் கட்சியின் கிளிநொச்சி மாவட்டக் கிளையால் ஒழுங்கமைக்கப்பட்ட மத வழிபாட்டு ஆராதனைகளிலும் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.









# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்


259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## அபவாதக் குற்றச்சாட்டு

ஆடத் தெரியாதவன் மேடை சரியில்லை என்றானாம்.

அந்த மாதிரி இருக்கின்றது அமைச்சரும் ஆளுந்தரப்பின் சபை முதல்வருமான பிமல் ரத்நாயக்காவின் குற்றச்சாட்டு.

வன்னியில் தமிழரசுக் கட்சி வாக்குகளை பெறுவதற்காக கசிப்பு விநியோகித்தது என்றும், மக்களுக்குப் பணத்தை வழங்கியது என்றும் அவர் குற்றம் சுமத்தி இருக்கிறார்.

தமிழரசுக் கட்சி இனவாதக் கருத்துக்களை முன்வைத்ததாகவும் அவர் கூறியிருக்கின்றார்.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் சாதாரணமானவை அல்ல. அவற்றை நாடாளுமன்றத்தில் இருந்து, நாடாளுமன்ற சிறப்பு உரிமைகளின் அடிப்படையில் பிரலாபிப்பதை விடுத்து, நாடாளுமன்றுக்கு வெளியே வந்து - உரிய முறையில் - ஆதாரங்களுடன் - நிரூபித்துக் காட்டும்படி அமைச்சர் பிமல் ரத்நாயக்காவுக்கு தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் சவால் விடுத்திருக்கிறார்.

ஆனால் அந்தச் சவாலை அமைச்சர் பிமல் ரத்நாயக்கா ஏற்றுக்கொள்வார் என்று நம்புவதற்கு இல்லை.

நாடாளுமன்றத் தேர்தலில் வழமைக்கு மாறாக தென்னிலங்கைக் கட்சி ஒன்றிற்கு வடக்கு மக்கள் காத்திரமான ஆதரவை வழங்கியிருந்தார்கள். அந்த ஆதரவை குறுகிய காலத்தில் அந்த கட்சி கோட்டை விட்டுவிட்டது. அது இத்தேர்தலில் அம்பலமாகியுள்ளது.

அந்தக் கட்சியின் சார்பில் வடக்கில் செயற்பட்டோர் பெரும் சண்டப்பிரசண்டம் பண்ணி, கட்சி மீது தமிழ் மக்களுக்கு இருந்த நம்பிக்கையை அடியோடு தகர்த்து விட்டனர் என்பதை இப்பத்தியிலும் நமது பத்திரிகையிலும் பல தடவைகள் சுட்டிக்காட்டி வந்துள்ளோம்.

இப்படி ஆளும் தரப்பு குறுகிய காலத்தில் தமிழ் மக்களின் நம்பிக்கையை இழந்து போனமைக்குக் காரணமான அக்கட்சியின் உள்ளூர் பிரமுகர்கள் அல்லது பிரகிருதிகள் இந்த வாக்கு இழப்புக்குக்கான குற்றச்சாட்டு தங்கள் மீது விழாமல் தவிர்ப்பதற்காக இப்படி அபவாதக் குற்றச்சாட்டுகளை அடுக்கி இருப்பார்கள் என்பது இலகுவாக ஊகிக்கத்தக்கது.

அப்படி தாங்கள் தப்புவதற்காக அக்கட்சியின் வடக்கு பிரதிநிதிகள் கொடுத்த கயிறை அமைச்சர் பிமல் ரத்நாயக்கா அப்படியே நம்பி விழுங்கி கொண்டு வந்து நாடாளுமன்றத்தில் கொட்டியிருக்கின்றார். அவ்வளவுதான்.

ஏற்கனவே இப்பத்தியில் நாம் சுட்டிக் காட்டியபடி, இத்தகையோரை அரசு நம்பினால் தமிழ் மக்களின் ஆதரவை அடியோடு ஆளுந்தரப்பு இழக்கும் என்பது நிச்சயம்.

தலைவர்கள் சரியாக இருந்தாலும் தகவல்கள் பிழைத்தால் என்ன ஆகும்? அந்தக் கதிதான் தேசிய மக்கள் கட்சியின் கொழும்பு தலைவர்களுக்கு ஏற்படப் போகின்றது. தவறான கயிறுகளை விழுங்கி கொண்டு தப்பிதமான அரசியலை அவர்கள் முன்னெடுக்கின்றார்கள்.

அதற்குக் கட்டியம் கூறும் நிகழ்வுதான் இப்படி தமிழரசு கட்சி பணமும் கசிப்பும் விநியோகித்து வாக்குகளை திரட்டியது என்ற குற்றச்சாட்டு.

உள்ளூர் கட்சிப் பிரமுகர்கள் தங்களை தோல்வியின் குற்றச்சாட்டில் இருந்து விலக்குவதற்காக முன்வைத்த அபவாதக் குற்றச்சாட்டுகளை ஆளும் தலைமை அப்படியே ஏற்றுக் கொள்வது - விழுங்குவது - அத்தலைமையின் முட்டாள்தனமன்றி வேறில்லை.

இத்தகைய நிலைப்பாட்டில் - இத்தகைய குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் - தமிழ் மக்களை தேசிய மக்கள் சக்தி நெருங்கினால் அக்கட்சி அந்த மக்களினால் ஓட ஓட விரட்டப்படும் என்பது நிச்சயம்.





## அதிகரிக்கும் போர் பதற்றம்:

# பாகிஸ்தான் விமான படைக்கு சொந்தமான மூன்று போர் விமானங்களை சுட்டு வீழ்த்தியது இந்தியா

பாகிஸ்தான் விமான படைக்கு சொந்தமான எப் 16 விமானம் மற்றும் 2 ஜேஎப் போர் விமானங்களை இந்திய இராணுவம் சுட்டு வீழ்த்தியுள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

பாகிஸ்தான், காஷ்மீரில் ட்ரோன்களை வீசி தாக்குதல் நடத்தி வருகிறது. இந்திய இராணுவம் எஸ் 400 வான்பாதுகாப்பு கவசம் மற்றும் ஆகாஷ் வான் பாதுகாப்பு அமைப்பு மூலம் அவை சுட்டு வீழ்த்தப்பட்டன.

இந்நிலையில், பாகிஸ்தான் விமானப்படைக்கு சொந்தமான எப் 16 போர் விமானம் உள்ளிட்ட 3 போர் விமானங்களை இந்திய வான் பாதுகாப்பு கவச அமைப்பு நேற்று மாலை சுட்டு வீழ்த்தியதாக தகவல் வெளியாகி உள்ளது.

பாகிஸ்தான் விமானப்படையின் முக்கிய விமானப்படை நிலையமான சர்கோதா விமான தளத்திலிருந்து எப்-16 புறப்பட்டது. இந்திய வான் ஏவுகணை சர்கோதா விமான தளத்திற்கு அருகில் போர் விமானத்தை சுட்டு வீழ்த்தியதாக இந்திய படை வட்டாரங்கள் தெரிவித்தன.

சர்கோதா பாகிஸ்தானின் முன்னணி விமான தளமாகும், மேலும் நாட்டின் மிகவும் பலமாக பாதுகாக்கப்பட்ட ஒன்றாகும், இது நாட்டின் பஞ்சாப் மாகாணத்தில் அமைந்துள்ளது.

அதேபோல் 2 ஜே.எப். போர் விமானங்களும் சுட்டு வீழ்த்தப்பட்டன.

# போர் பதற்ற நிலை காரணமாக நிறுத்தப்பட்ட ஐ.பி.எல்.போட்டி



இந்தியன் ப்ரீமியர் லீக் கிரிக்கெட் தொடரின் 58 ஆவது போட்டி தரம்ஷாலா மைதானத்தில் நேற்று நடைபெற்றது.

இப்போட்டியில் பஞ்சாப் கிங்ஸ் அணியும் டில்லி கெப்பிடல்ஸ் அணியும் மோதின.

இரவு 7.30 மணிக்கு ஆரம்பமான இந்த போட்டி இடைநிறுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்தியா – பாகிஸ்தான் எல்லைப் பகுதியில் நிலவும் பதற்ற நிலை காரணமாக இந்த போட்டி இடைநிறுத்தப்பட்டுள்ளதாக இந்திய கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

வீரர்கள் மற்றும் பொதுமக்களின் பாதுகாப்பு கருதி தரம்ஷாலா மைதானத்தில் விளக்குகள் அணைக்கப்பட்டுள்ளன என இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.





# 50 இந்திய இராணுவ வீரர்களை கொன்றதாக பாகிஸ்தான் தகவல்

எல்லைப் பகுதியில் 50 இந்திய இராணுவ வீரர்களை கொன்றுள்ளதாக பாகிஸ்தான் அறிவித்துள்ளது.

இந்தியா மற்றும் பாகிஸ்தான் நிர்வகிக்கும் காஷ்மீர் பகுதிகளை பிரிக்கும் கட்டுப்பாட்டு கோட்டில் நடந்த மோதல்களில், இந்தியாவின் 40 முதல் 50 வரையான சிப்பாய்கள் கொல்லப்பட்டுள்ளனர் என பாகிஸ்தான் தகவல் மற்றும் ஒளிபரப்பு அமைச்சர் அதாவுல்லாஹ் தரார் தெரிவித்தார்.

பாகிஸ்தானின் தேசிய சபையில் உரையாற்றும் போது அவர் இதனை தெரிவித்தார்.

இதுவிடயம் குறித்து இந்தியா இதுவரை எந்த மறுப்பு அறிக்கைகளையும் வெளியிடவில்லை.

இதேவேளை, இந்தியா – பாகிஸ்தான் சர்வதேச எல்லையில் மீண்டும் பதற்றமான சூழல் நிலவி வருவதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஜம்மு – காஷ்மீரைத் தவிர, பாகிஸ்தானுடன் எல்லையைப் பகிர்ந்து கொள்ளும் ராஜஸ்தான் மற்றும் பஞ்சாப் மாநிலங்களும் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. பாகிஸ்தான் பதில் தாக்குதல் நடத்தலாம் என்பதால் இந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சந்தேகத்திற்கிடமான யாரைப் பார்த்தாலும் அவர்களை சுட இந்திய அதிகாரிகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

எல்லையை ஒட்டிய பகுதிகளில் பதற்றம் நிலவுவதால் முன் எச்சரிக்கை நடவடிக்கையாக பஞ்சாப் மாநிலம் முழுவதும் பொதுமக்கள் ஒன்று கூட தடை விதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மறு அறிவிப்பு வரும் வரை பொது இடங்களில் கூட வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.









# பாக். கட்டுப்பாட்டு பஞ்சாப்பில் உள்ள பாடசாலைகளை மூடுமாறு அறிவிப்பு

பாகிஸ்தானின் பஞ்சாப் மாநிலத்தில் உள்ள அனைத்து பாடசாலைகளையும் எதிர்வரும் இரண்டு நாள்களுக்கு மூடுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், திட்டமிட்டப்படி பரீட்சைகள் நடத்தப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கராச்சி விமான நிலையத்திலிருந்து அனைத்து விமான சேவைகளையும் நள்ளிரவு வரை நிறுத்தி வைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பாகிஸ்தான் அரசாங்கம் அறிவித்துள்ளது.

முன்னதாக, பாகிஸ்தான் நேரப்படி மாலை 6 மணி வரை மாத்திரமே விமான சேவைகள் நிறுத்தப்பட்டிருந்தன.

இந்தநிலையில், அங்கு நிலவும் பதற்ற நிலையைத் தொடர்ந்து விமான சேவைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது.



# யாழ். பல்கலை பொன்விழா பிரமாண்டமாக பிரான்ஸில்!

## ஜீன் 8 ஆம் திகதி நடைபெற ஏற்பாடு

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் பொன்ழா நிகழ்வுகள் பிரான்ஸில் ஜீன் 8ஆம் திகதி பிரமாண்டமான முறையில் கொண்டாடுவதற்கான ஒழுங்குகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. பிரான்ஸ் தலைநகர், பரிஸின் புற நகர் பகுதியான Villeneuve Saint- Georges எனும் இடத்தில் உள்ள Espace Shine மண்டபத்திலே இந்தப் பொன்விழா நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

பிரான்சில் வாழும் பழைய மாணவர்கள் மட்டுமன்றி ஐரோப்பாவின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் யாழ். பல்கலைக்கழகத்தின் பழைய மாணவர்கள் இந்த நிகழ்வில் கலந்துகொள்ளவுள்ளனர்.

பாரம்பரிய மற்றும் கலாசார கலை நிகழ்ச்சிகளும் இரவு விருந்தும் கொண்ட இந்த நிகழ்வில், யாழ்.பல்கலைகழத்தில் கற்ற ஆளுமைகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து சிறப்பிக்கும் வகையில் இந்த நிகழ்வு அமைய இருக்கின்றது.

யாழ். பல்கலைக்கழகத்தினதும், வடக்கு – கிழக்கு பிரதேச வளர்ச்சிக்கும் பல முயற்சிகளை செய்து வரும் LIFT ஆய்வு அறக்கட்டளை அமைப்பின் அனுசரணையுடன், பிரான்ஸில் வாழும் யாழ். பல்கலைக்கழக பழைய மாணவர்களும், நலன் விரும்பிகளும் இந்த நிகழ்வை ஒழுங்கு செய்துள்ளார்கள்.

நிகழ்வுக்கான நுழைவுச் சீட்டுகளை இப்போது முதல் பெற்றுக்கொள்ளலாம் என்றும், விரும்புவோர், Jossey: 06 63 30 44 09 இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு உங்கள் நுழைவுச்சீட்டுகளைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும், மண்டப வாசலில் நுழைவுச்சீட்டுகள் விற்கப் படமாட்டாது என்றும் ஏற்பாட்டுக் குழுவினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வு பற்றிய தகவல்களை அறிந்துகொள்ள +33 7 53 50 93 96 என்ற இலக்கத்துடன் WhatsApp மூலமாக அல்லது uojfrance@gmail.com என்ற முகவரிக்கு மின்னஞ்சல் மூலமாகத் தொடர்பு கொள்ளலாம் என்றும் ஏற்பாட்டுக் குழு அறிவித்துள்ளது.



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர்.


இலங்கையில் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்ட சரித்திரத்தின் ஆரம்பத்தில் - எண்பதுகள் வரை - தாயகத்தில் நின்று நம் இனத்துக்காகப் போராடிய புலமையாளர். விடுதலைப் போராட்டத்தின் ஆரம்பக் கட்டத்தில் தியாகி சிவகுமாரன், புலிகளின் தலைவர் பிரபாகரன் மற்றும் உமாமகேஸ்வரன், சுந்தரம் சிறிசபாரத்தினம், சித்தார்த்தன் முதல் டக்ளஸ் தேவானந்தா வரை மூத்த போராளித் தலைவர்கள் எல்லோரோடும் சட்டவாளராகவும், தமிழ் மக்களின் புனர்வாழ்வுப் பணிகளை ஒருங்கிணைக்கும் தொடர்பாளராகவும் நெருங்கிப் பழகியவர். தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மற்றும் தமிழர் தகவல் நிலையம் ஆகியவற்றின் பிதாமகர்களில் ஒருவர். இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட கொடூரங்கள் குறித்து விசாரிக்க நியமிக்கப்பட்ட சன்சோனி கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பு வாதங்களையும் சான்றுகளையும் ஒருங்கிணைத்து நெறிப்படுத்தும் அனுசரணை சட்டத்தரணியாகச் செயற்பட்டவர். தற்போதைய நிகழ்வுகள் தொடர்பான அவரது பார்வை அவரது அனுபவங்களிலிருந்து தமிழ் மக்களின் புரிதலுக்காக இங்கு தொடராக வெளிவருகிறது.



ஆஸ்திரேலியாவில் புலம்பெயர் தமிழர்களின் சட்டநலன்களில் அதிக ஈடுபாட்டுடன் செயற்பட்டு வரும் அவர் முன்னர் ‘காலைக்கதிர்’ நாளிதழின் வாசகர்களால் நன்கு அறியப்பட்ட அரசியல் கட்டுரையாளர் என்பது குறிப்பிடத்தக்கது.

15

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?



சர்தார் வல்லபாய் பட்டேல் சிலை

ஆங்கிலேயர்கள் 1948 இல் இலங்கைக்கு சுதந்திரம் தந்து வெளியேறிய போது, அவர்கள் தமிழ் பிரதேசங்களையும் சிங்களப் பிரதேசங்களுடன் ஒன்றாக இணைக்கப்பட்டு இருந்த மாதிரியே விட்டுச் சென்றமைதான் இனப்பிரச்சினை உருவானதன் மூல காரணமென பலர் எழுதுவதுண்டு. அதில் உண்மை இல்லாமல் இல்லை. வட்டுக்கோட்டைத் தீர்மானமும் கூட ஐரோப்பிய காலனித்திய அரசுகளால் தமிழ் மக்களிடமிருந்து பறிக்கப்பட்ட இறைமையை தங்களது பாரம்பரிய பிரதேசங்களுக்கு மீளப் பெறுவது என்ற அடிப்படையிலேயே நிறைவேற்றப்பட்டது. ஆக, தாங்கள் நாட்டைப் பிரிக்கக் கோரவில்லை, தங்களது இறைமையையே மீளக் கோருகிறோம் என்ற விளக்கங்கள் தரப்பட்டன. ஆனால் சில சம்பவங்களை மறந்து விட முடியாது. அன்றைய காலத்தின் தமிழ்த் தலைவர்கள் ‘சிங்களவர், தமிழர், முஸ்லிம், பறங்கியர் யாவரையும் இலங்கையர் என்ற ஒரு மக்களாகவே’ பார்த்தனர். எல்லோரும் இணைந்து ஒரு சுபீட்சமான நாட்டை உருவாக்க அதன் வளங்களைப் பாவிக்க வேண்டும் எனக் கருதி, சிங்கள தலைமைகளுடன் இணைந்து பயணித்த தமிழ் தலைவர்கள், கொழும்புவாசிகள். அவர்களது சொத்து சுகங்கள் அங்குதான் இருந்தன என்பதால் தமிழ் பிரதேசவாசிகள் இவர்களிலேயே தங்கி இருந்தார்கள். பின்னாளில் இலங்கைப் பிரதமராக வந்த எஸ்.டபிள்யூ.ஆர்.டி பண்டாரநாயக்கா அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கும் அதிகாரம் கொண்ட சோல்பரி ஆணைக் குழுவின் முன், தமிழ் பிரதேசங்களும் கண்டியப் பிரதேசங்களும் சமஷ்டி அடிப்படையில் அமைந்த முறையில் அரசமைப்புச் சட்டம் அமைய வேண்டும் என சமர்ப்பணங்களைத் தரும் நோக்கில், தமிழ் தலைவர்களைத் தேடிச் சென்று அதற்கு ஆதரவு கேட்ட போதும், தமிழ் தலைவர்கள் அதனை ஏற்க மறுத்து விட்டார்கள். ஆகவே ‘ஒரு

தொடர்ச்சி ▼

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?


தொடர்ச்சி▲

நாடு, ஓர் அதிகாரம்' என்பதற்கு தமிழ் மக்களின் முன்னோடி தலைவர்கள் துணையாக இருந்தார்கள். அவர்களுக்கு சிங்கள தலைவர்களிடையே இருந்த நம்பிக்கையும் நல்லெண்ணமும் மட்டுமே தமிழ் மக்கள் தனியாகத் தங்கள் இறைமையைக் கோர வேண்டும் என்ற எண்ணங்களைத் தரவில்லை. ஆகவே, சுதந்திரத்தின் போது இலங்கை என்ற அடையாளத்தோடு, ஒரு நாடாக உருப்பெற்று, சர்வதேசத்தில் இடம்பெற்றது.

காலனித்துவ ஆட்சியாளர்கள் தாம் ஆண்ட பல தனித்துவமான இனக் குழுமங்களை தங்கள் வசதிக்கு ஒன்று சேர்த்து, நாடுகளாக்கி, பின்னர் அந்த இனக்குழுமங்களின் தனித்துவத்துவம் தொடர்பில் எவ்வித சிரத்தையும் காட்டாமல் அந்த நாட்டில் அவர்களுக்கு இணைவானவர்களிடம் அதிகாரத்தை விட்டுச் சென்றனர்.

இன்று பூமிப் பந்தில் நடக்கும் எத்தனையோ உரிமைப் போராட்டங்கள் காலனித்துவ எஜமானர்கள் தங்கள் வளங்களைத் தொடர்ந்தும் அனுபவிக்க வேண்டும் என உருவாக்கிய திட்டங்களினாலே எழுபவைதான்.

இந்தியாவின் நிலை கூட அதுதான். சுதந்திரத் தாகம் உணர்ச்சியூட்டிய காலங்களின் முன் எவ்வளவோ வித்தியாசமான இன, மத குழுமங்களை கட்டியாண்டது ஆங்கிலேய அரசு. பலவிதமாகத் தங்களது வசதிக்கேற்ப ஆங்கிலேய ஆட்சியுடன் ஈடுபட்டிருந்த பல இன, மத குழுமங்களைத் தங்களுக்கு விடுதலை பெற வேண்டும் என்ற கோரிக்கையில் காந்தி இணைத்து, 'வந்தே மாதரம்' எனவும் இந்தியாவுமாக்கினார். தொடர்ந்த தங்களது நலன்களுக்காக ஆங்கிலேய அரசு மதத்தைப் பாவித்து, ஜின்னாவைத் தூண்டி, பாகிஸ்தானைக் கோர வைத்தார்கள் எனப் பொதுவாக அறியப்பட்டாலும், வெளிப்படையாக ஆங்கிலேய அரசும்



இந்திரா காந்தி



மோடி

வின்ஸ்டன் சர்ச்சிலும், ஜின்னா இதை அந்த நேரத்தில் கேட்பது துக்ககரமானது எனவும், கவர்னராக இருந்த மவுண்ட் பேட்டன் மூலம் காந்தி, நேரு,பட்டேல் போன்ற காங்கிரஸின் மற்றத் தலைவர்களோடு பேச்சுவார்த்தைகளுக்கு செல்லுமாறும் அறிவுறுத்தினாலும், அவர்களது இரண்டாவது இரகசிய மட்டத்தில் இன்னுமொரு அதிகாரிகள் குழு மூலம் பாகிஸ்தானுக்காக நாடு எப்படி எல்லைக்கோடுகள் வகுக்கப்பட வேண்டும், ஜின்னா தன் கோரிக்கையில் திடமாக இருக்க என்ன செய்யப்பட வேண்டும் என்பன குறித்து கவர்னர் மவுண்ட்பேட்டனுக்கே தெரியாமல் காரியங்கள் நடந்தன. பாகிஸ்தானின் கோரிக்கையை உதாரணம் காட்டி ஜம்மு – காஷ்மீரத்தின் மன்னர்கள், ராஜஸ்தான், மகாராஷ்டிரா, மைசூரின் ராஜாக்கள், நவாப்கள், முக்கியமாக மிகவும் செல்வந்தரான ஹைதராபாத் நிஜாம் போன்றோரும் ஆங்கிலேயர்கள் தங்களிடமிருந்து பறித்த ஆளுமையைத் தங்களிடமே திருப்பித் தர வேண்டும் எனவும், காங்கிரஸ் ஓர் அரசியல் அமைப்பே தவிர, தங்களது இறைமைகள் தங்களது மக்களின் அனுமதி இல்லாமல் பெற்றுக்கொள்ள அது தகுதியற்றது என்றும் வாதிட்டனர். அப்படியாக எல்லாக் குழுமங்களின் கோரிக்கைகளையும் ஏற்று, தங்களுக்கு ஏற்றதாக இருந்த முத்துமாலையைப் பிரித்து விட ஆங்கிலேய அரசு விரும்பவில்லை. இந்தியாவைக் கட்டியெழுப்பிய காங்கிரஸும் தயாராகவில்லை.

இன்று மோடியின் பி.ஜே.பி.(BJP) சர்தார் வல்லபாய் பட்டேலுக்கு பிரம்மாண்டமான சிலைகளும் மரியாதைகளும் செலுத்துகின்றார்கள் என்றால், அதற்குக் காரணம், இந்திய சுதந்திரத் தறுவாயில் இந்த சிற்றரசுகள் எதுவும் வாலாட்டாமல், அப்படியான கிளர்ச்சிகள் ஏதும் ஏற்படுத்தினால் தான் நேரடியாகப் படைகளை அனுப்பி, சிற்றரசுகளைக் கைப்பற்றி, மன்னர் சொத்துக்கள் யாவற்றையும் திறைசேரிக்குச் சொந்தமாக்குவோம் என பயமுறுத்தி, அவர்களது எதிர்ப்புகளை கட்டி வைத்து, நிரந்தரமாக அடக்கியவர் சர்தார் வல்லபாய் பட்டேல் தான். இன்றைய இந்தியாவின் உண்மையான தேச பிதா காந்தியிலும் பார்க்க சர்தார் வல்லபாய் பட்டேல் என ஆர்.எஸ்.எஸ் பாசறையின் வழி வந்தவர்கள் கருதுகிறார்கள். பதவியும் அதிகாரமும் வந்ததும் சிலைகள் எழுப்புகிறார்கள். இப்படியான ஓர் இணைப்புதான் திராவிட வழியில் வாழ்ந்த தென்னகத்தையும் ஆரிய முறைகளில் வாழ்ந்த வடபகுதிகளையும் இந்தியா என்ற நாட்டிற்குள்

தொடர்ச்சி▼

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?

தொடர்ச்சி ▲

அடைத்தது. இதிகாச காலங்களில் இருந்து ஆரியத்திற்கும் திராவிடத்துக்கும் இருந்த போட்டிகள், பொறாமைகள் நன்கறியப்பட்டவை. இன்னும் அரசியல் போக்குகளிலே அவை தொடர்கின்றன. இப்படியான இணைப்புகளும் அவற்றின் மேலான பார்வைகளும் பிணக்குகளும் வரலாறுகளின் அனுபவங்கள் ஊடாக இனக் குழுமங்களால், அவர்கள் வதியும் நாடுகளால் பாவிக்கப்படுகின்றன.

ஜே.வி.பி. மாத்திரமல்ல, பெரும்பான்மைச் சிங்கள மக்கள், அதைத் தங்களது ஆதரவுக்காக பயன்படுத்திய அரசியல் கட்சிகள், இந்தியாவின் ஆரிய வடக்கைத் தங்களுக்கு இனரீதியாக சாதகமானவர்கள் எனவும், தென்னகத்தின் திராவிடத்தை சோழ சாம்ராஜ்யத்தின் அனுபவங்களால் தங்களுக்கு



ராஜீவ் காந்தி

எதிரியாகவும் பார்த்தே செயல்பட்டார்கள். அந்தப் பார்வைகளில் அவர்கள் ஈழத் தமிழரின், தமிழக அரசியல்வாதிகளின் நெருக்கத்தையோ கலாசாரத் தொடர்புகளை வளர்ப்பதிலோ விருப்பப்படவில்லை. மாறாக பயம் கலந்த அங்கலாய்ப்பை வெளிப்படுத்தி, அவற்றில் தீர்மானங்களை எடுத்தனர். சிங்களப் பெரும்பான்மை மக்கள் துரோகியாகப் பார்த்த கண்டியின் கடைசி மன்னன் விக்கிரமராஜசிங்கனுக்கு அவரது உறவினர்களால் வேலூரில் சமாதி வைத்தமை அவர்களை ஆத்திரப்படுத்தியது.

இந்த மனோபாவங்களில் சிறிமாவோ அரசு ஜனவரி 1974இல் யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்ட உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டை அதன் மொழி, கலாசார விழுமியங்களில் பார்க்காது, தாங்கள் தமிழ்நாட்டினால் விழுங்கப்பட்டு விடலாம் என்ற அரசியல் அச்சத்துடனான அடக்கு முறையிலேயே விடயங்களைப் பார்த்து காய்கள் நகர்த்தப்பட்டன. ஆகவே வடக்கு இந்தியாவுடன் ஆரியர்கள் என்ற அடிப்படையில் சிங்கள அரசுகள் முக்கியத்துவம் கொடுத்து ராஜதந்திர ரீதியில் காரியங்களை முன்னெடுத்து, தமிழகத்தைப் பொருளாதார ரீதியில் கூடப் புறக்கணித்தே நடந்தனர்.

அதுபோலவே 197இல் ஜே.வி.பி. உருவாகிய போது நாட்டில் உள்ள இந்தியத் தமிழ் தொழிலாளர்கள் இனரீதியான பார்வையில் வெளியேற்றப்பட வேண்டும் என்ற கொள்கைப்பாட்டிலும், ஆனால் இந்திய, பாகிஸ்தானிய போரா இனத்தவர்கள் முதலாளித்துவ முகவர்கள் என்பதால் அவர்களும் வெளியேற்றப்படுவது அவசியம் எனவும் பிரசாரம் செய்தனர். 1977 இல் ஜே.வி.பி. கட்சியாகப் பதிந்து ஜனநாயக அரசியலுக்குள் நுழைந்த போது, பொது அபிப்பிராயங்களுக்காக இந்தியத் தமிழ் வம்சாவளியினர், தங்கள் விருப்பில் நாட்டை விட்டுப் போகலாம் என்றும், அவர்கள் தொழிலாளர் வர்க்கம் என்பதால் இலங்கை பிரஜைகளாவதற்கு விண்ணப்பங்கள் தர அனுமதிக்கப்படுவார்கள் எனவும் பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டன. ஆயினும் போரா இனத்தவர்களை முதலாளித்துவத்தின் முகவர்களாகக் கணித்து, அவர்கள் வெளியேற வேண்டும் என்ற கடும் போக்கை ஜே.வி.பி. கையாண்டது.

இந்தியாவின் வடபகுதியில் ஆரிய மக்களால் நடைபெறும் இந்திய அரசை தங்களுக்கு நேச சக்தியாக அப்போது பார்த்தார்கள். தமிழ்நாடு ஈழத் தமிழர்கள் மூலம் தங்களை விழுங்கி விட அவர்களுக்கு ஆதரவு தரக்கூடாது என்ற பரப்புரை 1983இல் அவர்கள் (ஜே.வி.பி.) தடை செய்யப்பட்ட போதும் இருந்தது. ஜே.வி.பி. தங்களது புரட்சியின் மூலம் பதவிக்கு வந்தால் தாங்கள் தங்களது கம்யூனிஸ், இடதுசாரிக் கொள்கைகளால் அமெரிக்கா, இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் நடைமுறைப்படுத்த விரும்பும் முதலாளிய கொள்கைகளுக்கு எதிராக இந்திய அரசுக்கு கை கொடுப்பார்கள் என்ற நிலைப்பாட்டை எடுத்து, ஆதரவுத் தன்மையையே ராஜதந்திர ரீதியில் பகிர்ந்தனர்.

ஆனால் இந்திரா காந்தி 1983 கலவரங்களின் பின் தமிழரது பிரச்சினைகளில் ஆர்வம் காட்டுகிறார் என்ற போதும், அது, ஜே.ஆர். அமெரிக்காவுடன் இணைந்து முதலாளித்துவம் காலூன்ற உதவி செய்து, இந்தியாவுக்குப் பாதகமான நிலைகளை உருவாக்குவார் என்பதனாலேயே அப்படி இந்திரா நடக்கின்றார் என்றும், தாங்கள் பதவிக்கு வந்தால் அமெரிக்காவுக்கு ஆதரவுத்தளமாக இல்லாமல் இருந்தால், இந்திராகாந்தி தமிழர் பிரச்சினையில் மூக்கை நுழைக்க வேண்டியதில்லை எனவும் சிந்தித்தனர்.

எப்பொழுது ராஜீவ் காந்தி 1987 இல் இந்திய – இலங்கை ஒப்பந்தத்தை ஏற்படுத்தினாரோ அன்று முதல் அவர்கள் முன்னர் பார்த்த ஆரிய திராவிட பார்வையில் இருந்து மாறுபட்டு, இந்தியாவை முற்றும் முழுதாக சிங்கள மக்களின் பரம எதிரியாகவே கருதி, அவர்கள் வெளியேற்றப்பட வேண்டும், தங்களது இறைமையைக் காப்பாற்ற தங்களுக்குக் கடமை உண்டு என்ற கொள்கையைக் கடைப்பிடித்தனர்.

தொடர்ச்சி ▼

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?

**தொடர்ச்சி▲**

அப்பொழுது இருந்து ஜே.வி.பி. இந்தியாவுக்கு எதிரான உக்கிரமும் வன்மமும் ஆவேசமும் கொண்டவர்களாக உருவெடுத்தனர். அவர்களது அப்போதைய நிலை அவர்களின் மூன்றாம் தலைமுறைகளின் கொள்கைப் போக்காகவோ பரிணாமமாகவோ பார்க்கப்பட்டது.

ஜே.வி.பி. தாங்கள் நடத்திய வன்முறைகளில் அதனை நேரடியாகத் தமிழ் மக்களுக்கு எதிராகக் கட்டவிழ்க்கவில்லை. தமிழ் மக்களுக்கு எதிரான ஆத்திரங்களை அவர்களின் அரசியல் தலைவர்களுக்கு எதிரான அறிக்கைகளில் விளாசித் தள்ளி, பிரிவினைவாதிகளாகச் சாடினர். ஆயினும் திடமாக தமிழ் மக்களுக்கு நாட்டின் பிரதேசங்களில் எது வித பகுதிகளிலும் பிரத்தியேக உரிமைகளோ, உரித்துக்களோ அமைய முடியாது, எதுவித சுயாட்சியும் ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல என்ற கோட்பாடுகளில் அவர்களின் கருத்து அமைந்தது.

அவர்களுடைய அணுகு முறையில் ஸாராலினிஸ மாதிரியில் மிகவும் இறுக்கமான அதிகாரங்கள், அதன் கைகளில் முற்றாகக் குவிக்கப்பட்ட அரசு இருக்க வேண்டும், அதுவே சிங்கள மக்களுக்கு பாதுகாப்பு என நிர்பந்தித்தார்கள். அரசாங்கம் தமிழ் மக்களுக்கு ஒரு முறையிலான சுயாட்சியை கொடுக்க விழைகிறார்கள், அது சிங்கள மக்களுக்கான துரோகம் எனவும் தமிழருக்கும் இந்தியாவுக்கும் நாட்டை விற்றுவிட்டனர் எனவும் கூச்சல் போட்டார்கள்.

* * *

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் முடிவுகள் முக்கியமாக வடக்கு கிழக்கு பற்றியவை வெளியாகிய நேரம் தொட்டு கட்டுரையில் வாசகர்கள் சிலர் மட்டுமல்ல தமிழர் நலன்களின் அக்கறை கொண்ட பலர் 'இனி என்ன நடைபெறும்? தமிழ் மக்கள் தங்களது அபிலாசைகளை தெரிவித்து விட்டார்கள்தானே...!' என்று வினாவுகிறார்கள்.

அதேசமயம் சமூக வலைத்தளங்களிலும் ஊடகங்களிலும் கட்சிகள் எப்படி வெற்றி பெற்றன, எப்படி மற்றவர்கள் தோற்கடிக்கப்பட்டார்கள் என்ற ஆராய்வுகளை அதற்கு ஆதாரமாக கட்சிகளின் வாக்குப் பெறுபேறுளைத் தங்கள் வாசகர்களுக்கு சார்பாக பதிவிட்டுள்ளார்கள்.

'இனவாதத் தேசிய கட்சிகளுக்கு வாக்கு போடுவது வரலாற்றுத் தவறு என்றால், அதே கட்சிகளுடன் கூட்டு சேர்ந்து ஆட்சி அமைத்தால் அடுத்த தேர்தலில் நாங்கள் நேரடியாகவே தேசிய கட்சிகளுக்கு வாக்களிப்போம்! – இப்படிக்கு பொது ஜனம்' என்றும் ஒரு பதிவு இருந்தது.

எந்தத் தேசிய கட்சி தாங்கள் இனவாதக் கட்சி என்று ஏற்றுக் கொண்டது? ஜனாதிபதி, நாடாளுமன்ற தேர்தல்களில் தேசிய மக்கள் சக்தி தமிழ்ப் பகுதிகளில் கணிசமான வாக்குகளைப் பெற்றிருக்கின்றது. அதேபோல் ஐக்கிய தேசியக் கட்சி போன்றவையும் பெற்றிருக்கின்றன. இப்பொழுது கூட பொதுசனம் அவர்களுக்கு வாக்களித்துத்தானே இருக்கிறார்கள்? தமிழர்களது அபிலாசைகளுக்கு தீர்வாக எதைத் தந்து விட்டார்கள் அல்லது உறுதியளித்தார்கள்?

ஜே.வி.பியைத் தனது குழுமத்தில் பெரும்பான்மையாகக் கொண்ட தேசிய மக்கள் சக்தி, புரையோடிப் போன இந்த இனப்பிரச்சினையை எப்படி, எவ்வித கொள்கைகளில் அணுக முற்படுகிறது? எவ்வித தீர்வினை முன் வைக்கும்? பேரினவாத நூல் கட்டுக்களில் இருந்து விடுபட்டு எவ்வித தீர்வை முன்வைக்க முடியும்?– என்பனதான் எல்லோருடைய – முக்கியமாகத் தமிழ் மக்களது – அங்கலாய்ப்பு. தமிழர்களது 'அபிலாசைகளை' அநுரா ஜனாதிபதியாக நிறைவேற்றுவார் என்று தாங்கள் நம்புகிறார்கள் எனப் பிரதமர் மோடியும் தனது நான்காவது இலங்கை விஜயத்தின் போது



குணதாஸ அமரசேகர

பொதுவெளியில் கூறிச் சென்றார்.


இனப் பிரச்சினையால் முதுகெலும்பு உடைந்துள்ள நாட்டை நல்லிணக்கத்தால் மட்டுமல்ல, அதேசமயம் பொருளாதாரப் பிரச்சினைகளிலிருந்தும் நிமிர்த்துவதானால் முதலொல் இந்த முதுகெலும்பு நிலை கவனிக்கப்பட வேண்டும். இதுவரை வெறுமனே நல்லெண்ணம் என்ற பேச்சுக்களிலேயே நாள்கள் நகர்ந்து விட்டன.

ஏதும் நடக்குமா என்பதற்கு தமிழர் கோரிக்கைகள் பற்றி – பின் இனப்பிரச்சினை பற்றி – அவர்களது கொள்கைகளின் வளர்ச்சிகளில் இருந்துதான் அதனைக் கணிக்கலாம். தற்சமயம் அவர்களது 1989 வரையான நிலைகளைப் பார்த்தோம். அடுத்து போரில் அவர்களது பாகத்தையும், பெரும்பான்மை புத்திஜீவிகளினது ஈடுபாட்டில் அவர்களது ஈர்ப்பையும் புரிந்து கொண்டால், சதுரங்கத்தின் காய்கள் எப்படி நகரலாம் எனக் கணிக்கலாம்.

இந்தப் பதிவில் தொடர்ந்து புத்திஜீவி குணதாஸ அமரசேகரவைப் பற்றிய குறிப்பைப் பதிகிறேன் அறகலய காலங்களிலும் ஜனாதிபதி, நாடாளுமன்றத் தேர்தல்களின் போதும் அமைதியாக இருந்தவர், இப்பொழுது பிரதமர் மோடியுடன் கைச்சாத்திடப்பட்ட பாதுகாப்பு புரிந்துணர்வு ஒப்பந்தம் தங்களது மனித உரிமைகளை மீறுவது, அதன் அமுலாக்கத்தை தடை செய்ய வேண்டும் எனக் கோரி உயர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்துள்ளார். ஆக சோழியன் குடுமி சும்மா ஆடப்போவதில்லை. தீர்வின் தாக்கங்கள் இவற்றிலேயே அடங்கலாம். ஜே.வி.பியின் அடுத்த பரிமாணங்கள், அவை அவர்களுக்குத் தந்த வெற்றிகளையும் பார்த்து கேட்கப்பட்ட கேள்விகளுக்கு அனுமானங்களையும் தொடர்ந்து பார்ப்போம்.

**(தொடரும்)**

# சபைகளில் ஆட்சியமைப்பதற்கு சங்கு அணியை நாடும் கட்சிகள்



(கி.வசந்தன், ந.லோகதயாளன்)

உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சி அமைப்பது தொடர்பில் ஜன நாயக தமிழ் தேசியக் கூட்டணி யுடன் பேச்சு நடத்தியுள்ளோம் என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பி னருமான கஜேந்திரகுமார் பொன்னம் பலம் தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சி அமைப்பது தொடர்பில் கேட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

தமிழ் தேசியப் பேரவை உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சி அமைப்பது தொடர்பான கலந்துரையாடல்களை முன்னெடுத்துள்ளோம்.

ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்ட மைப்பைச் சார்ந்த அதன் தலைவர் சித்தார்த்தன் மற்றும் அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் மற்றும் அதன் பங்காளிக் கட்சியின் தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன் ஆகியோருடன் மேற் படி விடயம் தொடர்பில் உரையாடி யுள்ளோம். அவர்களிடமிருந்து சாதக மான பதில் கிடைத்தால் இணைந்து ஆட்சியமைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுவோம்.

அத்துடன், வவுனியா வடக்கு நெடுங் கேணியில் சிங்கள, பௌத்த இனவாத தேசிய மக்கள் சக்தி ஆட்சியைக் கைப் பற்றுவதனைத் தடுக்கும் வகையில் ஏனைய தமிழ் கட்சிகளுடன் இணைந்து ஆட்சியமைப்பதற்கு ஒத்துழைப்பு வழங்கவும் தீர்மானித்துள்ளோம் எனத் தெரிவித்தார்.

இதேநேரம் இவ்விடயம் தொடர் பில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியுடன் பேச்சில் ஈடுபட்ட தாக தமிழ் அரசுக் கட்சியும் தெரிவித் தது.

இவை தொடர்பில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலை வர்களில் ஒருவரான முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான த.சித் தார்த்தனைத் தொடர்புகொண்டு கேட்ட போது இரு தரப்பினரும் கலந்துரை யாடியமையை அவர் உறுதி செய் தார். இது தொடர்பில் விரைவில் கூடி ஆராய்ந்து முடிவு அறிவிக்கப்படும் என்றார் அவர்.

# கோவணத்துடன் சென்றவர்களிடம் ஆவணம் கேட்கிறீர்களா? காணி அபகரிக்கும் வர்த்தமானியை உடனே மீளப்பெறுங்கள்!

## ரவிகரன் எம்.பி. நாடாளுமன்றத்தில் வலியுறுத்து

(விஜயரத்தினம் சரவணன்)

கோவணத்துடன் சென்ற மக்களிடம் ஆவணம் கேட்கின்றீர்களா எனவும், கடந்தகால கொடுங்கோல் அரசு களைப் பின்தொடர்கின்றீர்களா எனவும், நாடாளுமன்றத்தில் சரமாரியாகக் கேள்வி எழுப்பிய வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், வடக்கு மாகாணத்தில் சுமார் 5,941ஏக்கர் காணிகளை அபகரிக்கும் நோக்கில் வெளியிடப்பட்டுள்ள வர்த்த மானி உடனடியாக மீளப்பெறுமாறும் வலியுறுத்தியுள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று உரை யாற்றும்போதே அவர் இவ்வாறு வலி யுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கருத் துத் தெரிவிக்கையில் –

வடக்கில் கரையோரத்தில் மக்க ளுடைய காணிகரை அபகரிக்கும் செயல் இடம் பெறுகின்றதா?

கடந்த 2025.03.28ஆம் திகதி வெளியிடப்பட்ட 2430ஆம் இலக்க வர்த்த மானிமூலம் யாழ்ப்பாணம் மாவட்டத் தில் 3,669 ஏக்கரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 1,703ஏக்கரும், கிளி



நொச்சி மாவட்டத்தில் 515ஏக்கரும், மன்னார் மாவட்டத்தில் 54 ஏக்கருமாக மொத்தம் 5,941 ஏக்கர் காணிகள், காணி நிர்ணயக் கட்டளைச்சட்டம் 5(1)ஆம் பிரிவில் அரசகாணிகளாக அபகரிக்கதற்கு நடவடிக்கை எடுப்ப தற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டி ருப்பதைப் பார்க்க முடிகின்றது.

குறிப்பாக குறுகிய காலத்தில் உரிய பதிவுகள் செய்யப்படவேண்டும். இல்லா விட்டால் அந்த மக்களிடம்களிடமிருந்து அவர்களின் காணிகளைப் பறிக்கப் போகின்றீர்களா? இது வடக்கு மக்க ளுக்கு நீங்கள் செய்யும் மிகப் பெரிய துரோகமாக தெரியவில்லையா?

அந்தமக்கள் 2009இல் இடம் பெயரும்போது எதனையும் கொண்டு செல்லவில்லை. அப்போது இனவாதத் தின் கொடூரம் நடந்தது.

கோவணத்தோடு சென்ற மக்களி டம் ஆவணங்கள் கேட்கின்றீர்களா? ஏற்கனவே கொடுமைசெய்த இனவாத அரசுகளை நீங்களும் பின்தொடருகின் றீர்களா?

வடக்கு, கிழக்கு மக்களுக்கு துரோ கம் செய்யவேண்டாம். எமது மக் களின் காணிகளை அபகரிக்கும் நோக்கில் வெளியிடப்பட்டுள். வர்த்த மானியை உடனடியாக மீளப்பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின் றேன் – என்றார்.

# வாழைச்சேனையில் மண் அகழ்வை எதிர்த்து மண் லொறியை மறித்து மக்கள் ஆர்ப்பாட்டம்

## இருவர் கைதையடுத்து பெரும் பதற்றம்






(கனகராசா சரவணன்)

வாழைச்சேனை கிண்ணியடி பிரதேசத்தில் மீன் வளக்கும் திட்டம் என்ற போர்வையில் பாரிய குழிகளை தோண்டி மண் அகழ்கின்றமையை எதிர்த்து பிரதேச மக்கள் மண்ணை ஏற்றிச் செல்லும் கனரக வாகனத்தை நேற்று வியாழக்கிழமை வழிமறித்து ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர். பொலிசாருடன் பேசுவதற்குச் சென்ற தமிழரசு கட்சி வேட்பாளர் உட்பட இருவரைக் கைது செய்தமையை அடுத்து அங்கு பெரும் பதற்றம் ஏற்பட்டது. பொலிசாரின் அடாவடியை எதிர்த்து சுட்டெரிக்கும் வெய்யிலில் தொடர்ந்து மக்கள் ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவிலுள்ள கிண்ணியடி ஐஸ் உற்பத்தி நிலையத்துக்கு அருகாமையிலுள்ள தனியார் காணி ஒன்றில் 2021ம் ஆண்டு மீன் வளர்க்கும் திட்டத்தின் கீழ் பாரிய குழிகளைத் தோண்டி மண் அகழ்ந்து வெளியிடங்களுக்கு எற்றிச் சென்று விற்பனை செய்து வந்துள்ளனர்.

இதனை கண்டித்து கடந்த காலத்தில் கிராமத்து இளைஞர்களினால் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன. அதனால் இத் திட்டம் இடைநிறுத்தப்பட்டது. இந்த நிலையில் மீண்டும் கடந்த முதலாம் திகதி குழிகளைத் தோண்டி மண் அகழப்பட்டமையை அடுத்து அங்கு சென்ற கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

மண் அழ்வில் ஈடுபட்டவர் தற்போது எங்களிடம் அனுமதி உண்டு எனக் குறிப்பிட்டு பொலிஸாருக்குத் தெரிவித்த முறைப்பாட்டையடுத்து எதிர்ப்பு தெரிவித்த 2 பேரை பொலிஸார் கைது செய்து அவர்களுக்கு எதிராக வழக்குப் பதிவு செய்து பொலிஸ் பிணையில் விடுவித்தனர்.

இந்த நிலையில் அகழ்ந்த மண்ணை ஏற்றிக் கொண்டு வேறு இடத்துக்கு கொண்டு சென்ற கனகர வாகனத்தை இன்று காலை 10.00 மணியளவில் பிரதேச மக்கள் ஒன்று திரண்டு வீதியில் வழிமறித்து, "எங்கள் கிராம மண் வளத்தை அழிக்காதே!", "மண் வளத்தை அழிக்கும் துரோகியே ஒழிக!", "சுற்றுச் சூழலுக்கு பெரும் பாதிப்பு!" என சுலோகங்கள் ஏந்தியவாறு அந்தத் திட்டத்தை நிறுத்தக் கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனையடுத்து அங்கு சென்ற பொலிஸாருடன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட - நடந்து முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிட்ட தமிழரசு கட்சியின் - வேட்பாளர் மற்றும் ஓர் இளைஞன் ஆகியோர் சென்று பேசிய நிலையில் அவர்கள் இருவரையும் பொலிஸார் கைது செய்து பொலிஸ் நிலையம் கொண்டு சென்றனர். அதையடுத்து அங்கு பெரும் பதற்றம் ஏற்பட்டது. அங்கு பொலிசார் குவிக்கப்பட்டனர்.

இதனை தொடர்ந்து ஆர்பாட்டக்காரர்கள் கைது செய்த இருவரையம் விடுதலை செய்யுமாறும் கோரினர். கைது செய்யப்பட்ட இருவருக்கும் எதிராக வழக்கு பதிவு செய்துவிட்டு அவர்களைப் பொலிஸார் பிணையில் விடுவித்தனர்.

இது தொடர்பாக அரசாங்க அதிபர் தலைமையில் மாவட்ட செயலகத்தில் பிரதேச செயலாளர், நில அளவை சுரங்க பணியகம் மற்றும் மாவட்ட நன்னீர் மீன் வளர்ப்பு அலுவலகம், மத்திய சுற்றாடல் அதிகார சபை போன்ற திணைக்களங்களுடன் விசேட கலந்துரையாடல் இடம் பெற்று, அடுத்து வரும் மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டம் வரை இந்த மண் அகழ்வை இடை நிறுத்தி வைக்க அதிகாரிகள் தீர்மானித்தனர்.

இருந்தபோதும் ஆர்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் அங்கு கொட்டகை அமைத்து அமர்ந்து தொடர்ந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுவருகின்றனர்.

# தேசியத்தை நேசிக்கும் கட்சிகளை இணைத்து வடக்கு, கிழக்கில் நாங்கள் ஆட்சி அமைப்போம்

## நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவிப்பு

(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை வைத்துப் பார்க்கின்ற போது வடக்கு, கிழக்கில் எந்த கட்சியும் தனித்து ஆட்சி செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. ஏற்கனவே நாங்கள் கூறியமை போல் தேசியத்தை நேசிக்கும் கட்சிகளை இணைத்துக் கொண்டு நாங்கள் ஆட்சி அமைப்போம் என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் நேற்று மதியம் இடம்பெற்ற ஊடக சந் திப்பில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

நடைபெற்று முடிந்துள்ள உள்ளூ ராட்சி மன்றத் தேர்தலில் மக்கள் வடக்கு, கிழக்கில் எமக்கு ஆணை தந்துள்ள னர். எதிர் வரும் காலங்களில் அனை வரும் ஒற்றுமையாக செயல்பட வில்லை என்றால் மக்கள் வழங்கிய ஆணையை மாற்றியமைக்க வேண்டிய நிலை ஏற்படும் என்ற செய்தியை சொல்லி யுள்ளனர்.

நாங்கள் ஒற்றுமையாக இல்லாத நிலையில் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஜே.வி.பி.அரசாங்கத் திற்கு கூடுதலாக மக்களின் ஆதரவு கிடைக்க பெற்றுள்ளமை அனைவரும் அறிந்த விடயம். எனினும் இடம்பெற்ற உள்ளூராட்சி மன்ற தேர்தலில் வடக்கு கிழக்கில் ஜே.வி.பி.பாரிய பின்னடை வைச் சந்தித்துள்ளது.




தமிழர்களை தமிழர்கள் ஆளக்கூடிய வகையில் தமது ஆணையை வழங்கி உள்ளனர். மேலும் தமிழ்க் கட்சிகள் ஒற்றுமையாக பயணிக்க வேண்டும் என்கின்ற செய்தியையும் சொல்லி இருக்கிறார்கள்.

தமிழீழ விடுதலை இயக்கத்தினை பொறுத்த வகையில் அடுத்தடுத்து வருகின்ற தேர்தலாக இருக்கலாம், போராட்டங்களாக இருக்கலாம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்கின்ற அடிப் படையில் செயல்படக்கூடிய ஒரு முயற்சியை நாம் முன்னெடுக்கின் றோம்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை வைத்துப் பார்க்கின்ற போது வடக்கு கிழக்கில் எந்த கட்சியும் தனித்து ஆட்சி செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள் ளது.

ஏற்கனவே நாங்கள் கூறியது போல் தேசியத்தை நேசிக்கும் கட்சிகளை இணைத்துக் கொண்டு நாங்கள் ஆட்சி அமைப்போம். நாங்கள் தமிழரசு கட்சி யுடனும்,கஜேந்திரகுமார் பொன்னம் பலத்தின் அணியுடனும் பேசிக்கொண்டு இருக்கின்றோம்.

ஆட்சி அமைக்கின்ற எங்களுடைய முதல் செயல்பாடுகள் தமிழ் தேசியக் கட்சிகளுடன் இருக்கும்.அதனடிப்ப டையில் பேச்சு வார்த்தைகள் இடம் பெற றுக் கொண்டிருக்கிறன.

எதிர்வரும் காலங்களில் நாங்கள் ஒற்றுமையாக ஒரே அணியாக செயல் படுவதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்து வோம். நாங்கள் அனைவரும் ஒற்றுமை யாகச் செயல்பட வேண்டும் என்பதற்காக மக்கள் வாக்குகளை வழங்கி உள்ளனர்.

மக்களின் ஆணையை உணர்ந்த வர்களாக நாங்கள் செயல்பட வேண் டும்.– என்றார்.

# மாற்றுத்திறனாளிகள் தின அதிஷ்ட இலாபச் சீட்டிழுப்பு




கண்பார்வையற்றோருக்கான அறக்கட்டளை நிலையத்தால் மாற்றுத் திறனாளிகள் தின மாபெரும் அதிஷ்ட இலாபச் சீட்டிழுப்பு வருடாந்தம் முன் னெடுக்கப்பட்டு வருகின்றது. 2025ஆம் ஆண்டுக்கான சீட்டுப்பின் முதலாவது சீட்டை வடக்கு மாகாண ஆளுநர் நா.வேத நாயகன் கடந்த செவ்வாய்க்கிழமை சம் பிரதாயபூர்வமாகப் பெற்றுக்கொண்டு ஆரம்பித்து வைத்தார்.

# இன்றைய ராசி பலன்கள் - 09.05.2025




இன்றைய நாள் சற்று மந்தமாக காணப்படும். ஆன்மீக ஈடுபாடு மன நிம்மதி மற்றும் ஆறுதலை அளிக்கும்.

வேலை தொடர்பான பயணம் காணப்படுகின்றது. அதன் மூலம் சுமாரான பலன்களே கிடைக்கும். கடின உழைப்பின் மூலம் மட்டுமே வெற்றி கிட்டும்.

மகிழ்ச்சியாக இருக்க அகந்தை உணர்வை தவிர்க்கவும். உங்கள் துணையுடன் மனம் திறந்து பழகவும்.

அதிகரிக்கும் பொறுப்புகள் காரணமாக கூடுதல் செலவுகள் ஏற்படும். இது உங்களுக்கு மிகுந்த கவலையை அளிக்கும்.

ஆரோக்கியம் சுமாராக இருக்கும். தலை வலி ஏற்பட வாய்ப்புள்ளது. அது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும்.




நீங்கள் தைரியமாக சரியான பாதையில் செயல்பட வேண்டியது அவசியம். உங்கள் பயத்தை ஒதுக்கித் தள்ளி நம்பிக்கையுடன் செயற்படுங்கள்.

உங்கள் பணிகளை திறம்பட ஆற்ற உங்களுக்கு பொறுமை அவசியம். நீங்கள் யோசித்துச் சிறப்பாகச் செயற்பட வேண்டும்.

உங்கள் துணையுடன் பேசும்போது இணக்கம் குறைந்து காணப்படும். முதல் முறை பேசிக்கொள்வது போல பேசுவீர்கள்.

இன்று கூடுதல் செலவுகள் ஏற்படும் என்பதால் உங்களுக்கு கவலை ஏற்படும். இது தவிர்க்க முடியாதது. எனவிய கவனமாக இருக்கவும்.

கண்களில் எரிச்சல் பாதிப்பை ஏற்படுத்தும். மருத்துவம் பார்த்துக் கொள்வது நல்லது.




நீங்கள் சுய முன்னேற்றப்பாதையில் செல்வீர்கள். நீங்கள் இன்று சில லட்சியங்களை அடைய வேண்டும் என்று உங்களை தயார் படுத்திக் கொண்டு இந்த நாளை சுமூகமாக்குவீர்கள்.

பணியிடச் சூழல் உங்களுக்கு சாதகமாக இருக்கும். உங்கள் பணியில் வெற்றி பெற உங்கள் மனதை செலுத்துவீர்கள்.

நீங்கள் உங்கள் துணையுடன் நட்பாகவும் அன்பாகவும் நடந்து கொள்வீர்கள். பயணத்தின் போது இருவரும் உற்சாகமான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள்.

கடின உழைப்பின் மூலம் மட்டுமே வெற்றி கிடைக்கும். பணப்புழக்கம் அதிகரிக்கும்.

ஆரோக்கியம் பொதுவாக சிறப்பாக இருக்கும். அமைதியான அணுகுமுறை மூலம் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நம்பிக்கை உணர்வுடன் காணப்படுவீர்கள்.




இன்று பண வரவு காணப்படலாம். இன்று உங்கள் செயல்களை முடிப்பதற்கு திட்டமிடுவீர்கள். நீண்ட கால திட்டங்களுக்கு இந்த நாள் உகந்த நாள்.

உங்கள் பணியில் புதிய வாய்ப்புகள் வருவதற்கான வாய்ப்புகள் உள்ளது. கடின உழைப்பு மற்றும் சிறந்த முயற்சி மூலம் நீங்கள் சிறந்த நிலைக்கு வருவீர்கள். இதன் மூலம் உங்களுக்கு அங்கீகாரம் கிடைக்கும்.

நீங்கள் உங்கள் துணையுடன் வெளிப்படையாக பழகுவீர்கள். இதனால் இருவருக்கிடையே நல்லிணக்கம் வலுப்படும்.

உங்கள் நிதி நிலைமை திருப்திகரமாக இருக்கும். பணத்தை பயனுள்ள நோக்கத்துக்குச் செலவு செய்வீர்கள்.

உடல் ஆரோக்கியம் பொதுவாக சிறப்பாக இருக்கும்.




கையிலுள்ள பணிகளை முடிப்பதற்கு நீங்கள் மிகுந்த முயற்சி எடுக்க வேண்டும். பொதுவில் இன்றைய நாள் மிகவும் கடினமாக இருக்கும்.

கவனக் குறைவு காரணமாக பணியில் தவறுகள் நேரலாம். பணிகளை திறமையாக ஆற்ற ஆன்மீக ஈடுபாடு சிறந்தது.

உங்கள் துணையிடம் உணர்ச்சிவசப்படுவீர்கள். இதனால் இருவருக்குமிடையே தன்னம்பிக்கை நிலை குறையும்.

நிதி நிலை வளர்ச்சி சற்று குறைவாக இருக்கும். உங்கள் செலவைக் குறைக்கச் சிறந்த திட்டமிடலை மேற்கொள்ள வேண்டும்.

உடல் ஆரோக்கியத்தில் சிறிது பாதிப்பு இருக்கும். உங்களுக்கு முதுகு வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்றைய நாள் முன்னேற்றத்திற்கு உகந்த நாள் அல்ல. உங்கள் அணுகுமுறையில் யதார்த்தம் தேவை.

உங்கள் பணிகளை மேற்கொள்ள பொறுமை அவசியம். பணிச்சுமையும் அதிகமாக காணப்படும்.

நீங்கள் உணர்ச்சி வசப்பட்டு உங்கள் துணையுடன் சண்டையிடுவீர்கள். உறவில் நல்லிணக்கத்தை பராமரிக்க இத்தகைய போக்கை தவிர்க்க வேண்டும்.

பணப்புழக்கம் குறைந்து காணப்படும். அதிகரிக்கும் செலவுகள் கவலையை அளிக்கும்.

தலைவலி ஏற்பட வாய்ப்புள்ளது. அமைதியாக கட்டுப்பாட்டுடன் இருப்பது நல்லது.




இன்று இனிமையான தருணங்கள் காத்திருக்கின்றன. பொழுதுபோக்கு நிகழ்ச்சியில் பங்கு பெறுவதன் மூலம் நீங்கள் பதற்றத்திலிருந்து விடுபடலாம்.

உங்கள் பணியைப் பொறுத்த வரை சுய வளர்ச்சிக்கு உற்சாகமான நேரம். புதிய முயற்சிகளும் சாத்தியம்.

உங்கள் துணையுடன் நண்பர் வீட்டு நிகழ்வுகளுக்குச் செல்வீர்கள். இருவரும் உற்சாகமாக நேரத்தை கழிப்பீர்கள்.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும். உங்கள் குடும்பத்துடன் வெளியிடங்களுக்கு செல்வீர்கள்.

சிறந்த மன உறுதி காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நீங்கள் திருப்தியாக உணர்வீர்கள்.




இன்றைய நாள் மிகவும் அற்புதமான நாள். இன்று உங்களிடம் அதிக ஆற்றலும் உறுதியும் காணப்படும்.

பணியில் உங்கள் முயற்சிக்கு வெற்றி கிட்டும். நீங்கள் தன்னம்பிக்கையுடன் பணிகளை மேற்கொள்வீர்கள்.

உங்கள் துணையுடன் நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். குடும்பத்தில் சுப நிகழ்சிகள் நடைபெறக் காண்பீர்கள்.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும். நிதியில் ஸ்திரத்தன்மை பெறுவீர்கள்.

ஆரோக்கியத்தில் எந்தப் பிரச்சினையும் இருக்காது. உறுதியான போக்கு காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் - 09.05.2025




புத்திசாலித்தனம் மற்றும் சமநிலை அணுகுமுறை வெற்றிக்கு வழிகாட்டும். இன்றைய நாளை நன்கு பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

பணியில் மிதமான முன்னேற்றம் காணப்படும். நேரப்படி பணிகளை செய்வதன் மூலம் திறமையாக பணியாற்ற முடியும்.

நீங்கள் உணர்ச்சி வசப்படுவீர்கள். அதனை உங்கள் துணையிடம் வெளிபடுத்துவீர்கள். இதனால் உறவின் நல்லிணக்கம் பாதிக்கும்.

நிதி வளர்ச்சி சுமாராக இருக்கும். பணத்தை கவன மாகச் செலவு செய்யவும்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. அமைதியாக இருந்து பதட்டத்தை தவிர்ப்பதன் மூலம் ஆரோக்கி யத்தை பராமரிக்கலாம்.




உங்கள் விருப்பங்கள் இன்று நிறைவேறும். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள்.

சக பணியாளர்கள் உதவிகரமாகவும் ஆதரவாகவும் இருப்பார்கள். பணி யைப் பொறுத்தவரை நீங்கள் திறம்பட பணியாற்றி உங்கள் செயல்திறனை நிரூபிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு செல் வீர்கள். இதனால் உங்கள் துணையை நன்கு புரிந்து கொள்வீர்கள்.

பணம் அதிக அளவில் காணப்படும். சுப நிகழ்ச்சிக்காக பணத்தை பயன் படுத்தலாம்.

நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். உங்கள் ஆரோக் கியம் சிறப்பாக இருக்கும்.




நீங்கள் உற்சாகமாகவும் ஆற்ற லுடனும் இருப்பது நல்லது.பலன் களை எதிர்பாராது செயால்பட்டால் வெற்றி கிடைக்கும்.

பணியிடச் சூழல் உங்களுக்கு உகந்ததாக இருக்காது. அதிகப் பணிகள் மற்றும் அசௌகரியங்கள் உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

நீங்கள் எந்த விஷயத்தையும் தீவிரமாக எடுத்துக் கொள்வீர்கள். சிறிய விஷயத்திற்கு வருத்தப் படுவது உறவை பாதிக்கும்.

உங்கள் வீட்டின் முன்னேற்றத்திற்காக பணம் செலவு செய்வீர்கள். இதனால் அதிக செலவு ஏற்படும். நெருங் கிய சொந்தங்களுக்காக பணம் செலவு செய்வீர்கள்.

உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துவது சிறந்தது.




பொதுவில் இன்றைய நாள் சிறப்பாக இருக்கும். உங்களுக்கு பயன் தரும் முடிவுகளை நீங்கள் இன்று எடுக்கலாம்.

நீங்கள் உங்கள் இலக்குகளை அமைத்து அதனை அடைவீர்கள். புதிய வாய்ப்புகள் உங்களுக்கு கிடைப்பதற் கான சாத்தியம் உள்ளது.

உங்கள் துணையுடன் அன்பாக மகிழ்ச்சியாக நடந்து கொள்வீர்கள்.இதனால் இருவரிடையே நல்லுறவு வள ரும்.

உங்கள் கையிலுள்ள பணம் உங்களுக்கு போது மானதாக இருக்கும். அதில் சிறிது பணத்தை பய னுள்ள விஷயங்களுக்கு செலவு செய்வீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இன்று நீங்கள் முழு ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள்.



# ஐஸ் போதைப் பொருளுடன் நேற்று சம்மாந்துறையில் இளைஞர் கைது

**(சம்மாந்துறை தில்சாத் பர்வீஸ்)**

தனது உடமையில் மிகவும் சூட்சுமமான முறையில் ஐஸ் போதைப் பொருளை மறைத்து வைத்திருந்த சந்தேக நபர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். அத்தோடு உடமையில் இருந்த ஐஸ் போதைப் பொருளையும் சம்மாந்துறை பொலிஸ் நிலைய பெருங்குற்றப் பிரி வினர் மீட்டுள்ளனர்.

ஷஇந்தச் சம்பவம் நேற்றுக வியா ழக்கிழமை காலை வேளையில் நடை பெற்றுள்ளது.

ஷஅம்பாறை மாவட்டம், சம்மாந்-துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட செட்டவட்டை பகுதியில் இக் கைது இடம்பெற்றுள்ளது.

சம்மாந்துறை பெருங்குற்ற பிரி வினருக்கு கிடைக்கப்பெற்ற தக வலின் அடிப்படையில் மேற்கொள் எப்பட்ட பரிசோதனை நடவடிக்கை யின் போது 21 வயதுடைய சந்தேக நபர் ஐஸ் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடமிருந்து 2 கிராம் 470 மில்லிகிராம் ஐஸ் மீட்கப்பட் டது. சந்தேக நபர் சான்றுப் பொருள் களுடன் சட்ட நடவடிக்கைக்காக சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசார ணைகளைச் சம்மாந்துறை பொலி ஸார் மேற்கொண்டு வருகின்றனர்.